235

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

பருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

13 JUL 1933
MADRAS

Vol 6] 1933 ஆம் மே மீ 4உ [No. 18

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 341
2. தமிழ்ப் பாடம் (நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 343
3. தமிழ்நாட்டு இராஜ இரத்தினங்கள் — N. R. சேஷாசாரி 344
4. தேவகி (ஓர் நாவல்) — K. இராஜகோபாலன் 345
5. அப்பர் (64 கலை-வியாகரணம்-சுட்டெழுத்து) — E. N. தணிகாசல முதலியார் B.A.B.L.) 348
6. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்) — T. N. சேஷாசலம், B.A., B.L. 349
7. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 10-ம் தசகம்) — K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 352
8. யாப்பிலக்கணம் (செய்யுள்-கலிப்பா) — வித்துவான் M. V. வேணுகோபாலப் பிள்ளை 353
9. வாலிவதை (ஓர் ஆராய்ச்சி) — V. V. ஸ்ரீநிவாசாச்சாரியார் B.A.B.L. 355
10. வர்த்தமானம் 359

## கலாநிலயம்

18976

### சமயச் சாந்தி 3.

அளப்பருங்காலத் தகவயின் நாம் உளராகி இருக்கும் நாள் மிகச் சில. பிறந்தும் வளர்ந்தும், பகைத்தும் வென்றுந் தோற்றும், பெற்றும் இழந்தும், சிரித்தும் அழுதும், இறந்தும் முடிவதெல்லாம் இவ்வொருசாண் காலத்திற்குள் நடந்தேறி விடுகின்றன. அளவிது மிகச் சிறிதென்று தெரிந்திருந்தும் ஏனோ நாம் அமைதி நாடாமல் அலைகின்றோம். இச்சிறிய அளவினுள்ளும் இறுதிநாள் நிச்சயமில்லை. நாளை என்பது நமனது நாளாகி நம்புதற்கியலாததா யிருக்கின்றது.

காலத்தின் அளவுந் திறமும் இவ்வண்ணம் அனைவர்க்கும் ஒருபடித்தாக, அதனூடு பயில்கின்றவர் தம் வாழ்க்கைவகைகளோ பலதிறப் பட்டவைகளா யிருக்கின்றன. சிலருக்கு இவ்வாழ்க்கை நறவின் வள்ளம். மொண்டு மொண்டு மாந்துவதே அத்தகைய மாந்தர் தொழில். இன்னுருவன்றிச் சிற்சில போது புளிங்காடி அக்கிண்ணத்தில் வருவதும் உண்மையே. வந்தக்கால் வாயிலெடுத்தும் தித்திப்பைத் தீரப் பருகியும் காலத்தைக் கழித்தகல்வார் இவர். களியாட்டயர்தலே கருத்தாய் முடிகின்ற திவ் வாழ்க்கை. வேறு சிலர் தம் வாழ்க்கையை ஓர் சித்திரமாகச் செய்கின்றனர். பலநிற வண்ணங்களால் தீட்டித்தீட்டித் திகழ்கின்ற இவ்வாழ்க்கை காலவரையில் ஒருவாறு வெளுத்துக் காட்டுகின்றதெனினும், அதனூடு உருவித் தோன்றும் பொன்னூலொன்று காலங்கடந்த பெருமையோடு நிரந்தரமாய்த் திகழும் ஒளிஅவர்கண்களில் தோன்றாதிருப்பதில்லை. மற்றுஞ் சிலர்க்கு இல்வாழ்க்கையானது வழிதுறை தெரியாதவோர் கடற்பிரயாணம் போன்றிருக்கின்றது. பொங்குங் கடலில் அஞ்சாது அவர் புல்லிய தம் நாவாயைத் திண்ணிய நம்பிக்கையுடன் செலுத்திச் செல்கின்றனர். இடையிலே கப்பல் உடைந்தாலும் அதுவும் அவர்களுக்கோர் நன்மையே. நீந்தி வரும் முயற்சியையும் மகிழ்வாராகின்றார்.

சிற்சிலர் செய்தி இவ்வாறாக, ஏனைய மாந்தர், இவர் தாமே பெரும்பாலோர், தம்முடைய வாழ்க்கையை வறியவோர் எந்திரமாகவே இயற்றி விடுகின்றனர். பிறந்தநாள் முதல் இறக்கும் நாளீறாக, சிறுசிறுசக்கர ஜாலங்களென்ன அவ் வெந்திர வாழ்க்கைக்கே அடிமைகள் அவர். சிந்தனையின்றி உவகையின்றி ஆன்மாவின் உணர்வுமின்றி, பகலினின்று இரவிற்குள் உருண்டு, இரவினின்று பகலின்கண் எழுந்து, வருந்தியும் துயின்றும் விழித்தும், பெற்றுஞ் செத்தும் தம் வாழ்க்கைக் கோலத்தை அழித்தொழிவதே இன்னோர் கடன். இவர் வாழ்க்கையில் வாய்மைநெறி காணல் அரிதினும் அரிதாகி நிற்கின்றது. சிந்தனையாள ரனைவரும் இவர்களைக் கண்டே அஞ்சுகின்றனர்; இவர்களது கதியைக் கருதியே நாம் மனம் மிக நைதல்வேண்டும்.

தன்னிடைப் பட்டவைகளைத் தேய்த்துத் தேய்த்துத் தானுந் தேய்கின்ற தன்மையது எந்திரம். இருந்து சுழலும் இருப்பு எந்திரமும் அதுதான், இயங்கிச் சுழலும் வாழ்க்கை எந்திரமும் அதுதான். இவ்விரண்டினும் சாந்தியென்பது எந்நாளுமில்லை. நேற்றைப்பொழுது எவ்வண்ணம் விடிந்ததோ அவ்வண்ணமே இற்றைப்பொழுது விடியுமென்ற நிச்சயமும் நாளைப்பொழுதும் விடியலாமென்ற நம்பிக்கையுமே வாழ்க்கையின் சாந்திக்கு அடையாளங்களாகும். இதுவுந்தான் மாறுபாடும் முன்னேற்றமு மில்லாமல் தேங்கிக்கிடக்கும் ஒரு எந்திர வாழ்க்கைபோல் தோன்றலாம். இருப்பினும், நம் முன்னையோர் ஒரு படித்தாய அமைதியே ஆதாரமாய் வாழ்ந்த வாழ்க்கையையும், இக்காலம் எல்லாரும் ஒரு படித்தாய் அல்லலுற்ற எந்திரங்களாய் அமைந்திருப்பதையும்

ஒன்முகக் கருதி மயங்கலாகாது. ஆலமரமும் ஒரு நாளிருந்ததுபோல் மறுநாளும் இருக்கின்றது; அலைகடலும் அவ்வாறே. ஆயினும் அதன் அமைதியை இதன் நிலைமையோடு இணைக்கவொண்ணுமோ. இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த லார்ட் ஹேளடன் (Lord Houghton) என்பவர், "பண்டைய மக்கள்" என்னுந் தலைப்பு வைத்துப் பாடியுள சில பாசுரங்களை ஈண்டுக் காணலாம்.

### The Men of Old.

I know not that the men of old
Were better than men now,
Of heart more kind, of hand more bold,
Of more ingenious brow:
I heed not those who pine for force
A ghost of time to raise
As if they thus could check the course
Of these appointed days.
Still it is true, and over true,
That I delight to close
This book of life self-wise and new,
And let my thoughts repose
On that humble happiness
The world has since foregone—
The daylight of contentedness
That on those faces shone.
With rights, tho' not too closely scanned,
Enjoyed, as far as known,—
With will by no reverse unmanned—
With pulse of even tone,—
They from to-day and from to-night
Expected nothing more,
Than Yesterday and Yesternight
Had proferred them before.
To them was life a simple art
Of duties to be done,
A game where each man took his part,
A race where all must run;
A battle whose great scheme and scope
They little cared to know,
Content, as men at arms, to cope
Each with his fronting foe.
Man now his Virtue's diadem
Puts on, and proudly wears,
Great thoughts, great feelings, came to them
Like instincts, unawares:
Blending their souls' sublimest needs
With tasks of every day,
They went about their gravest deeds,
As noble boys at play—
And what if Nature's fearful wound
They did not probe and bear,
For that their spirits never swooned
To watch the misery there,—
For that their love but flowed more fast,
Their charities more free,
Not conscious what mere drops they cast
Into the evil sea.
A man's best things are nearest him
Lie close about his feet
It is the distant and the dim
That we are sick to greet:
For flowers that grow our hands beneath
We struggle and aspire—
Our hearts must die except they breathe
The air of fresh Desire.
But, Brothers, who up Reason's hill
Advance with hopeful cheer—
O! loiter not, those heights are chill,
As chill as they are clear;
And still restrain your haughty gaze,
The loftier that ye go,
Remembering distance leaves a haze
On all that lies below.

சிந்தித்துச் சிந்தித்து நம் வாழ்க்கையோடு சேர்த்துக் கொள்ளத் தக்கவை இச்சொற்கள். "நேற்றும் நேற்றிரவும் தமக்குத் தந்ததனினும், இன்றும் இவ்விரவும் தமக்கு வேறொன்று தரவேண்டுமென்று எதிர்பார்ப்பதற்கில்லாத பெற்றியோர் அக்காலத்தவர்" என்று லார்ட் ஹௌடனால் பாராட்டப்பெறுகின்ற முற்காலத்தவர்க்கும், எந்திரம்போல் ஒருநாள் சுழன்றபடி மறுநாள் சுழல்கின்ற இக்காலத்தவர்க்கும், இடையே இருக்கின்ற வேற்றுமையின் நுட்பத்தை உணர்ந்தறிதல் வேண்டும். இவ்விரு திறத்தோர்க்கும் வாழ்க்கையென்பது ஒரே வண்ணமாய் நாளொடு நாள் கழிந்து தேங்கிக்கிடப்பதுபோல் மேற்பார்வைக்குத் தோன்றலாம். அந்தரம் நோக்கின் அதன் பிழை வெளிப்படும். முன்னை நாள் பெற்றதனினும் பிறிதொன்றுதாம் பிற்றைநாள் பெறுதல் வேண்டுமெனும் நினைவின்றியே துயிலெழுந்து அற்றைப்பொழுதினை அமைதியுடன் கழித்து, "எண்ணியது இன்று யாம் எய்தவில்லையே, நாளையேனும் எய்துவோமோ" என்ற ஏக்கமொன்றுமின்றித் துயிலச் செல்லல் தொன்மையோர் மரபு. மற்று, "நேற்றைப்பொழுது நாம் எய்தாததை ஒருகால் இன்றைக்கேனும் எய்தினலாகாதோ" என்று காலைதோறும் கவலையுடன் கண்விழித்து, "எய்தினேம் அல்லோம்" என்னும் சோர்வுடன் மாலைதோறும் அமளி சேர்கின்ற இக்கால யந்திர வாழ்க்கையின் அவலம் முற்றிலும் வேருயது. முன்னது இருந்து வளர்தல், பின்னது தளர்ந்து தேய்தல். பிறர் வாழத் தாமும் வாழுந் தகைமையோர் அவர்; பிறரைத் தேய்க்கப் புகுந்து தாமுந் தேய்கின்ற வகையே கற்றவர் இவர். இவர்களைக் குறித்துத்தான் ஸ்ரீமான் ஜெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்,

" When you are no longer a cog in the machine of society where you exploit and are exploited, when you, the individual, do not abandon yourself to authority, when you free yourself from all traditions which cripple your mind and heart, when you cease to look for happiness, for Truth, through another, then you will become utterly responsible in action and thus will create an understanding of life, based on Truth and freedom."

என்று எடுத்துப் பேசுவதாகக் கொள்ளல் வேண்டும். இல்லையேல், லார்ட் ஹௌடன் மகிழ்ந்துரைத்த பண்டைய மரபின் பெருமையை இவர் மறுத்தபடியாகும்.

லார்ட் ஹௌடன் உரைத்த வாக்கியங்களில் நினைவிற் கொள்ளற்குரியது இன்னுமொன்றுளது. இக்காலத்திற் சிலர், அன்பென்றும், சுயநயம் நாடாத் தியாகம் என்றும் தூய்மையென்றும் சில மேலான அறங்களைத் தாம் தாங்கியுளர் என விளம்பி அதனை அனைவருங் காணும்வண்ணம் தருமம் என்னும் பெயராற் புனைந்த முடியினைப் பெருமிதத்துடன் சூடித்தம்மைக் காட்டிக்கொள்கின்றனர். புனைவேடக் கபட நாடகம் நடிப்பவரல்லராயினும், செயற்கையாய்ச் சேர்த்துக்கொள்ளும் இத் தருமநோக்கமும் வாழ்க்கையும், பண்டைக் காலத்தினர் அவர்களையறியாமலே இயற்கையாய் ஏற்றுக்கொண்டிருந்த உயரிய சிந்தனைகளுக்கும் உயரிய உணர்விற்கும் பலபடி தாழ்ந்தனவேயாம். ஆன்மாவிற்கு அவசியமான உயரிய தருமங்களையெல்லாம் அவர் வாழ்நாளின் வழக்கமான காரியங்களுடன் இயல்பாகவே கலந்துகொண்டிருந்தனர். மாண்புடைய இற்பிறந்த இளமக்கள் விளையாடும் விளையாட்டேபோல் அவர் செயற்கரிய பெருஞ்செயல்களை எளிதில் சாதித்தனர். வேட்டுவப் பெருந்தகை திண்ணன், கருதிக்கருதி யாதுங் கழறுமல் நேரே எம் காளத்தியப்பன்றன் புண்பட்ட கண்ணிற்கீடாகத் தன் கண்ணை இடந்து அப்புவான். அது கடவுள் பக்தி. இக்காலம் சமயத் தொண்டர்களென்ற நினைவினுல் விவகரிப்பவர்களில் கடவுளர் கண்களைப் பிய்க்கின்ற பான்மையல்லால் புரியும் கருமத்தின் பயனுக வேறு சில காண்டலரிது.

விரைவில் நேராகும் என நம்பி, பத்திரிகை சிறிது காலங்கடந்து வருவதை நமது நண்பர்கள் பொறுத்துக்கொள்ளவார்கள் என்று நினைக்கின்றோம். "மானேஜர்"



## தமிழ்ப் பாடம் 68.

### நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[330-வது பக்கத் தொடர்ச்சி]

வாகுகனே நளன் ஆவான் என்பதை இவ்விதம் தன் மக்களைக்கொண்டு சோதித்தறிந்த தமயந்தி, விதர்ப்பனிடம் சென்று இச்செய்தியைக் கூறியதை இனிவரும் மூன்று செய்யுள்கள் செப்புகின்றன.

கொற்றக் குமரனையுங் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்ரு னுங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தாரம் மாற்ற மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தா ளழுது. 65.

பொழிப்புரை:—வெற்றி வாய்ந்த இளவரசனையும் இந்திரசேனையையுங் கண்டு நளன் சொல்லிய சொற்களைத் தோழியர் வந்து தமயந்திக்குக் கூறினர். அவ்வார்த்தைகளை அவர் கூறியவளவிலே தமயந்தி மனமழிந்து அழுதவண்ணமாய்த் தரையில் விழுந்தாள்.

---

கொங்கை யளைந்து குழறிருத்திக் கோலஞ்செய்
அங்கை யிரண்டு மடுபுகையா—லிங்ஙன்
கருகியவோ வென்றழுதாள் காதலனை முன்னாள்
பருகியவேற் கண்ணாள் பதைத்து. 66.

பதப்பிரிவு:—கொங்கை அளைந்து குழல் திருத்தி கோலம் செய் அம் கை இரண்டும் அடு புகையால் இங்ஙன் கருகியவோ என்று அழுதாள் காதலனை முன் நாள் பருகிய வேல் கண்ணாள் பதைத்து.

அன்வயம்:—காதலனை முன்நாள் பருகிய வேல் கண்ணாள், பதைத்து, "கொங்கை அளைந்து குழல் திருத்திக் கோலம்செய் அம் கை இரண்டும் இங்ஙன் அடு புகையால் கருகியவோ" என்று அழுதாள்.

#### பதவுரை.

காதலனை - தன் நாயகனை
முன்நாள் - பழைய நாட்களில் [கிய
பருகிய-(ஆசையோடு அருந்துவதுபோல்) நோக்
வேல் - வேலைப்போன்ற
கண்ணாள் - கண்களையுடைய தமயந்தி,
பதைத்து - துடித்து,
"கொங்கை - எனது கொங்கைகளை
அளைந்து - அளைந்தும்,
குழல் - எனது கூந்தலை
திருத்தி - திருத்தியும் (எனக்கு)
கோலம் - அலங்காரம்
செய் - செய்த
அம் - அழகிய (அவனது)
கை - கைகள்
இரண்டும் - இரண்டும்
இங்ஙன்-இப்படி
அடு - சமைக்கின்ற
புகையால் - புகையினுல்
கருகியவோ - கருகிப்போய்விட்டனவோ"
என்று - என்று
அழுதாள் - (தமயந்தி) அழுதாள்.

விரிவுரை:—முன்னுட்களில் தன்னை அன்போடு அணைத்த நளனது கரங்களை இங்குத் தமயந்தி பரிவினுல் பாராட்டுகின்றுள். கார்க்கோடகன் கடித்த விஷத்தினுல் உடலம் வெந்து கருகியிருக்கின்றதென்பதை அவள் அறியாளாகையால், சமையற் செய்யும்போது புகை பட்டுப்பட்டுக் கருகினவோ அக்கைகள் என்று இரங்கினுள். நளனுக்கும் இத்தொழில் செய்யும் கதி நேர்ந்ததே என்பது அவள்படும் வருத்தம். காதலனை முன்னுள் பருகிய வேல் கண்ணாள், என்பது, "வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா வாம நெடுந்தோள்" என்று முன் கூறியிருப்பதன் பொருளைத் தழுவியிருக்கின்றது. நளனுடைய மிகுந்த அழகை அவள் காணுந்தோறும், "அப்படியே அவ்வழகைக் குடித்துவிட்டா லாகாதா" என்ற ஆர்வத்துடன் பார்க்குமாம் அவள் கண்கள்.

கொங்கை அளைதல் குழல்திருத்தல் முதலிய செய்கைகள், சூளாமணியில் சொல்லியுள்ளபடி, "காம வேகத்தை மெல்ல மெல்லப் பெருக்கியிடும்" தன்மையன. "குழலை யான் திருத்திக் கோதை சூட்டுவன் குறிப்புண்டாயின், மழலைவாய் திறந்து ஓர் மாற்றம் அருளுக மடந்தை" என்று அந்நூலில் (சூளாமணி, கல்யாணச் சருக்கம், 166வது செய்யுள்) வந்துளது.

---

மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேருங் கொண்டணைந்து--மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்கா
[ணெங்கள்
கொடைத்தொழிலா னென்றுள் குறித்து. 67.

பொழிப்புரை:—"இந்நகரத்திற்குப் போந்துள இருதுபன்னனுக்குத் தேர் நடத்திவந்து சமையல் தொழிலுஞ்செய்கின்ற இவ்வரசன்தான் வள்ளலாகிய நமது நளன்" என்று தமயந்தி நிச்சயித்துத் தன் தந்தை வீமராஜனிடம் தெரிவித்தாள்.

### இலக்கணம்

வார்த்தைகள் ஒன்றையொன்று தொடர்ந்துவரும்போது அவ்விரண்டு வார்த்தைகளுக்குஇடையேவேற்றுமையுருபேனும்,உருபோடு வேறுசொல் லேதேனும் சேர்ந்துதொக்குஇருக்குமாயின் அத்தொடர்தொகைநிலைத்தொடர் என்று அழைக்கப்படுமென்றும், அவ்வாறு ஒன்றும் தொக்கு இராமல் அர்த்தம் விளங்கும்படி தொடருமாயின் அத்தொடர் தொகாநிலைத்தொடர் என்று அழைக்கப்படும் என்றும்,முன் கூறினேம். அத் தொகாநிலைத்தொடர்கள், எழுவாய், இரண்டுமுதல் ஏழுவரையிலுள்ள அறுவகை வேற்றுமைகள்,விளி, வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்,இடைச்சொல், உரிச்சொல், அடுக்கு, ஆகிய இவைகளுள் ஒன்ருய் இருக்கக்கூடியதையுங் கண்டோம்.

இனி, தொகைநிலைத்தொடர்களை ஆராய்வோம். முதலில் இவைகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம். குதிரை வாங்கினன், பொன்குடம் என்பனபோல்வரும் தொடர்களை விரித்தால் அவை, குதிரையைவாங்கினன் என்றும், பொன்னுல்செய்த குடம் என்றும் விரியும். இப்படி வேற்றுமை உருபு மாத்திரமாவது, அல்லது வேற்றுமை உருபோடுகூட

வேறு ஒருசொல்லும் சேர்ந்தாவது, இரண்டு மொழிகளுக்கு இடையே தொக்கு இருக்குமாயின், அவ்விரண்டு மொழிகளும் சேர்ந்து வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் ஆகும். இவ்விதம் இரண்டுமுதல் ஏழுவரையிலுமுள்ள வேற்றுமை உருபுகள் (தனியாகவாவது வேறு ஒரு சொல்லோடு சேர்ந்தாவது) இடையே மறைய நடக்கின்ற தொடர்கள் வேற்றுமைத்தொகைநிலைத் தொடர்கள். வேற்றுமை உருபுமாத்திரம் தொக்கு இருக்குமாயின், அது வேற்றுமைத்தொகைநிலைத்தொடர் எனப்படும் என்பதையும், வேற்றுமை உருபோடுகூட அர்த்தம் பூர்த்தியாவதற்கு வேண்டிய வேறு ஒரு சொல்லும் தொக்கு இருக்குமாயின், அது வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்பதையும் முன் பலவிடங்களில் கூறியிருக்கின்றோம். வேண்டிய உதாரணங்களும் முன் பெயர்ச்சொல்லின் வேற்றுமைகளை விளக்கியுள்ள பாடங்களில் கூறப்பட்டிருக்கின்றன; அவைகளைப் பார்த்துக்கொள்ளவும்.

# தமிழ்நாட்டு இராஜ இரத்தினங்கள்.

[326-வது பக்கத் தொடர்ச்சி]

## ஆட்சிமுறை

**த**மிழ் மன்னர் ஆட்சி முறை மிகவும் ஒழுங்குற்றது. நல்லமைச்சர்களும், அறிவாளரான அந்தணர்களும், அநுபவம் மிக்க சான்றோரும் அங்கத்தினர்களாயமைந்த ஒரு சபையுமுண்டு. அதற்குத்தலைவன் "அரசன்". அக்கூட்டத்திற்கு "அவை" யென்று பெயர். அரசன், தான் விரும்பியவாறு எதனையும் நடத்தற்குரிமையுடையவனென்றாலும் பல அதிகாரிகளின் ஆலோசனையை அனுசரித்தே ஒவ்வொரு காரியத்தையும் நடத்துவது வழக்கம். இவ்வதிகாரிகளை "உடன் கூட்டத்து அதிகாரிகள்" அல்லது "உறுதிச் சுற்றத்தார்" என்று கல்வெட்டுக்களும் செப்புச் சாஸனங்களும் கூறுகின்றன. இவர்கள் மன்னவனால் அளிக்கப்பெற்ற பலப்பல மாண்புகளைப் பெற்றுச் சிறப்புற்றவர்கள். இவர்களிடத்தில் இராஜன் தன் மனதிலுள்ள எல்லா இரகசியங்களையும் வெளியிடுவான். அன்னாரும் அவனது விருப்பங்களை நீதி வழுவா நெறிமுறையில் நிறைவேற்றுவர்.

இது தவிர, "ஐம்பெருங் குழு;" "எண்பேராயம்" என்ற இரண்டு முக்கிய சபைகளும் இருந்தன. ஐம்பெருங் குழுவில் (1) அமைச்சர் (2) குலகுரு (3) சேனாதிபதி (4) தூதர்கள் (5) ஒற்றர்கள் அங்கத்தினராயிருந்தனர். எண்பேராயத்தில் (1) கஜான்ஜி (2) சமஸ்தானாதிகாரி (3) கண்காணிகள் (Overseers) (4) காவலுலாவிகள் (Patrol Officers) (5) காலாட்படைத் தலைவர்கள் (6) துரகப்படைத் தலைவர்கள் (7) மாவுத்தத் தலைவர்கள் (8) நகரச் சீமான்கள் அங்கத்தினர்களாய் நியமனம் பெற்றிருந்தனர். இனி இவர்களை யன்றி அரசாட்சியினை முட்டின்றி நடத்தும் "கருமமாராயம்" என்போரும், தலைநகரிலிருந்து வழக்காராய்ந்து நீதி செலுத்தும் அறங்கூறவையத்தாரும் இருந்தனர்.

தற்காலம்நடைபெறும்ஆங்கிலஅரசாட்சியில், "ராவ் பஹதூர்", "திவான்பஹதூர்" "ஸர்" முதலியகௌரவ பட்டங்கள் அளிக்கப்படுவது போல முற்கால மும்மன்னர்கள் நாளில்" மூவேந்த வேளான்" "கோளராஜன்", "காலிங்காராயன்", "தொண்டைமான்" முதலியபட்டங்கள் அரசாங்க அதிகாரிகளுள் சிறந்தோர்க்குப்பெருஞ்சபைமுன்னர் வழங்கப்பெற்றன.

## நியாய பரிபாலனம்

பண்டைப் பெரு மன்னர்களை நியாயக் குன்றுகளென்றே சொல்லவேண்டும். பக்ஷபாதமின்றி நியாயத்தைப் பரிபாலித்தனர். சாக்ஷிகள் ரூபனையில்லாமலோ, வாக்கு மூலங்களின் மாறுபாட்டினாலோ, குற்றஞ் செய்தோரின் பெருஞ் செல்வாக்கினாலோ, பேரிடத்துப் பந்துத்துவத்தினாலோ, மற்றும் இடம் பொருள் ஏவல்களின் சந்தர்ப்பங்களினாலோ, தங்களையும் மீறி நீதி தவறிக் குற்றமில்லாதானைக் குற்றவாளியாகக் கொண்டு தண்டித்துவிட்டதாகப் பிற்காலத்தில் எப்பொழுது சந்தேகம் ஏற்பட்டாலும் தமிழ்த் தரணியாளர்கள் சிறிதும் தயங்காது தங்கள் உயிரைத் தாங்களே மாய்த்துக்கொள்ளுவார்கள். கொடுங்கோலரசன் என்று பிரஜைகள் அபிப்பிராயப்படுகிறார்கள் என்று அவர்கள் ஒருமுறை கேள்வியுற்றாலும் மணியிழந்த நாகம்போல் மனம் புண்படுவர்.

இதற்குச் சான்றாகக் கோவலன் சரித்திரத்தைச் சிறிது படிப்போம். நெடுஞ்செழியபாண்டியன் செவ்வனே விசாரியாமல் குற்றமற்ற கோவலனைக் கொல்லச் செய்தான். கோவலனது தர்மபத்தினியாகிய கண்ணகி மிக்க கோபாவேசத்துடன் பாண்டியன் முன் சென்று அன்னவனது அடாச்செயலை எடுத்துக் கூறிக் "கோவலன் குற்ற மற்றவன்" என்பதை நிரூபித்தாள். செழியன் தனது ஒப்பற்ற அதிகாரச் செருக்கினால் கண்ணகியை முனிந்தானா? இல்லையில்லை. தன் செங்கோல் கொடுங்கோலாயிற்றென்பதை உணர்ந்தானோ இல்லையோ அதே க்ஷணத்தில் சிம்மாசனத்தினின்று உயிரற்ற பிணமாய்க் கீழே விழுந்தான். ஐயோ! பரிதாபம். மானத்தினிடத்தில் எவ்வளவு இலக்ஷியம் பார்த்தீர்களா? நீதியினிடத்தில் எவ்வளவு நாட்டம் பார்த்தீர்களா? பிரஜைகளிடத்தில் எவ்வளவு ப்ரேமை பார்த்தீர்களா? பரம்பொருளிடத்தில் எவ்வளவு பயம் பார்த்தீர்களா? அரசனெவ்வழி யவ்வழி குடிகளல்லவா? நீதிபதிகளும், அதிகாரவர்க்கத்தினரும், பிரஜைகளும் பரம பாவனர்களாயிருந்தார்களென்பதற்குச் சான்றாக இன்னொரு கதையைக் கவனிப்போம்:

தன் பிள்ளையென்றும் பிறர்பிள்ளையென்றும்பாரபக்ஷம்பாராத மனுநீதி சோழன் என்ன செய்தான்? ஓர் ஆவின் கன்றைத் தன் மகன் வீதிவிடங்கன் அறியாமற் கொன்றதற்காகக் கொஞ்சமேனும் தயை தாக்ஷண்யம் பாராமல் அவனை ஆவின் சேய் இறந்துபட்டவிடத்தில் அதே தேர்ச் சக்கரத்தின்கீழ்க் கிடத்தி, தானே தேரோட்டிக் கொன்று பழிதீர்த்தான். துலாக்கோலன்ன செங்கோலோச்சின தமிழ்த் தரணியாளரது நியாய பரிபாலனத்திற்கு இக்கண்ணராவியான கதையைவிட வேறு சான்றும் வேண்டுமோ?



மற்றுமொரு ராஜரத்தினத்தின் செயலைப் பாருங்கள். குலசேகர பாண்டியன் மாறுவேடம் பூண்டு நகர்ச் சோதனை நிமித்தம் ஓரிரவு மதுரையம்பதி வீதி வலம்வரும் பொழுது ஓரில்லத்தில் கீரந்தை யென்னும் வேதியன் தான் காசியாத்திரை செல்லக் கருதி அதைத் தன் பத்தினிக்குத் தெரிவித்தான். அதைக் கேட்டதும் அவள் அந்நகரில் தனித்திருக்கக் கலங்கி நின்றாள். அப்பொழுது வேதியன், "கண்மணி! இம்மாநகரில் இருப்பதற்கோ அஞ்சுகின்றனை? இதுவோ பாண்டிய மன்னனது துலாக்கோலன்ன செங்கோலின் கீழ்த் துலங்குகின்றது. தன்னுயிரே போல் மன்னுயிரைக் காத்துவருகின்ற வள்ளலான குலசேகரக் கோமானது ராஜரீகத்தில் பயமென்பது முண்டோ? வீணில் மனங்கலங்காதே" என்று சமாதானங் கூறிவிட்டுக் காசிக்குப் பிரயாணமாயினான்.

இத் தம்பதிகளின் சம்பாஷணையைச் செவிமடுத்த குலசேகரன் அப் பார்ப்பனிக்கு அன்றுமுதல் எவ்வித இடுக்கணும் வாராது கவனித்துவந்தான். சில மாதங்களுக்குப்பின் ஓர்நாள் இரவு பார்த்திபன் வழக்கம்போல் நகர்ச்சோதனை புரிந்துவருஞ்சமயம் கீரந்தையின் கிரகத்தில் யாரோ ஒரு ஆடவன் பேசுகின்ற குரல் கேட்டுக் கதவைத் தட்டினான். அன்று பகலே வாரணாசியினின்று வீடு திரும்பி வந்திருந்த கீரந்தன் "யாரது?" என்று அதட்டிக்கேட்டான். அக் குரலோசையால் அவன் காசிக்குச் சென்றிருந்த அந்தணனே யென்றறிந்த அரசன், "இவனுக்கு இவன் நாயகியின் மீது யாதொரு விதமான சந்தேகமும் உண்டாகாமலிருக்கவேண்டுமே. இதற்கென் செய்வது" என்று சற்றே யோசித்தான். "சரி, எல்லோருடைய வீட்டுக் கதவையும் இதே மாதிரி தட்டிவிட்டுப் போவோம். எவனோ கள்வன் செய்ததென்று எல்லோரும் நினைத்துக்கொள்ளட்டும்'! எனத் தீர்மானித்து வரிசையாக ஒரு வீடுவிடாமல் கதவைத் தட்டிக்கொண்டேபோய் அரண்மனை சேர்ந்தான்.

மறுநாள் காலையில் அத்தெருவாரெல்லாம் மன்னவன் முன் ஒன்றுகூடி "மஹாப் பிரபோ! ராஜாதிராஜப் பிரபோ! நேற்றிரவு நிசிவேளையில் ஒரு திருடன் எங்கள் வீடுகளுக்கு வந்து கதவை யிடித்து எங்களுக்கு மிகுந்த பயத்தை உண்டாக்கினான். நல்லவேளையாய் நாங்கள் தூங்காது விழித்திருந்தோம். அயர்ந்து தூங்கியிருந்தால் வீடுதோறும் புகுந்து திருடியிருப்பான். அச்சோரனை சும்மா விடக்கூடாது எப்படியாவது கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும்" என்று முறையிட்டுக்கொண்டனர். உடனே காவலன், "அப்படியா! அவ்விதம் மக்களின் நித்திராபங்கம் செய்து கவலைக்குக் காரணமாயிருந்தவனை என்ன செய்யலாம்? என்று தன் மந்திரிமார்களை வினவினான். "அவனது கையைக் கொய்தெறியவேண்டும்" என்று அவர்கள் விடை பகர்ந்தனர். மற்றையோரும் அதை ஆமோதித்தனர் உடனே கோதிலாக் குணமுடைய கொற்றவன் தனது உடைவாளை யுருவி, "இக்கையே அக்குற்றத்தைக் செய்தது" என்று சொல்லிக்கொண்டே தனது கரங்களிலொன்றைக் கொய்தெறிந்தான். பிறகு நடந்தவரலாற்றை நவின்றான். இவனல்லவோ தர்மதேவதை! இவனல்லவோ நியாயச்சிலை! அமைச்சரும் குடிமக்களும் வியப்பும், இரக்கமும், தம் மனதில் மாறிமாறித் தோன்றியவர்களாய் யாதொன்றும் பகர முடியாமல் ஸ்தம்பித்து நின்றனர்.

ஆகாய மார்க்கத்தில் அருளாளன் பிரத்யக்ஷமானான். "குடிகளின் குறைநிமித்தம் கைகுறைத்த காவலா! மக்களின் மனவமைதிக்காக் அங்கங்குறைத்த அமலா!! நீதி நிர்மாணத்திற்காக நீண்டகை யொழித்த நிமலா!!! உன் கரம் பொன் கரமாய் வளரட்டும்" என்றருளி மறைந்தார். அக்கணமே அம்மன்னவனுக்குப் பொற்கை தோன்றியது. அதனால் அப்புண்ணியனுக்குப் "பொற்கைப் பாண்டியன்" என்ற பெயர்உண்டாயிற்று. பிறகு பொற்கைப் பாண்டியன் பிரஜானுகூலனாய்ப் பாராண்டுவந்தான். இவ்விதம் நியாயதிருஷ்டியிற் சிறந்த முக்கோன்களின் சரித்திரம் பலவுள. (தொடரும்)

# தேவகி

[325-வது பக்கத் தொடர்ச்சி]

## அத்தியாயம் 11.

**கழிந்த** மாலை சோதிடன் வரவினால் என் மனத்திருந்த பெருங் கலக்கம் விடியலானதுபோல் இரவும்விடிந்தது. வந்த விருந்தினர் எல்லோரும் முன்னிரவே சென்றதினால் மாளிகை நடமாட்டமற்றதாய்த் துறவியின் உள்ளம் போல் அமைதியில் தோய்ந்திருந்தது. படிப்பதும் இராணிக்குப் பாடம் கற்பிப்பதும் தனியிருக்கும் வேளையில் என் வள்ளலார் நிகழ்த்திய நாடகத்தை யுன்னிக் களிப்பதும், பரமனடி போற்றுவதுமாய் நானும் காலத்தைக் கழித்துவந்தேன். இவ்வாறு, சோதிடநாடகம் நிகழ்ந்து மூன்று மாதங்களாயின. பெண்ணகத்தார் வறிதே சென்றனர் எனினும் ஜயரங்கபூபதியார் மணப்பேச்சுமாத்திரம்வளர்பிறைமதியமென மேன்மேல் வளரலானது. ஜயரங்க பூபதியார் அடிக்கடி என்னறைக்குள் வருவதும் என்னொடு வார்த்தையாடுவதுமா யிருந்தார். இது அன்னையாருக்கும் மற்றப் பணியாளருக்கும் தெரியவர, அவர்கள் அயிர்க்க வாரம்பித்தனர். இதன்முன் என்னுடன் ஒவ்வொருநாளும் ஒருமுறையாவது பேசிச் செல்லும் அன்னையார், என் பக்கம் திரும்புவதையும் நிறுத்தினார். பணியாளரும் என்னைப் புறக்கணிக்க வாரம்பித்தனர். முகங்கொடுத்துப் பேசுவாரின்றி யான் அம்மனையிற் கழித்த நாட்கள் பல.

அன்னையார் என்னைப் புறக்கணிப்பது பற்றி நான் அவர்மீது கோபங் கொள்ளவில்லை. குலத்தாலும் உடைமையாலும் மிகவுயர்ந்த அவரது திருமகனார் ஏழையும் அநாதையுமான என்னை மணப்பதை அன்னையார் எப்படி விரும்புவார். அன்னையின் நிலையில் நானிருந்தால் மற்று நானுந்தான் அவ்வாறு செய்யேனோ? பின் ஏன் என்மனம் அவர்பால் விழைவுகொள்கின்றது. இக்கேள்விக்கு விடைதான் வருவதில்லை. இன்னபடி எண்ணமிட்டு நான் சிற்சில சமயம் வருந்திவந்தேன். ஒருநாள் இருந்தாற்போலிருந்து கலியாணத்திற்கு நாளும் குறிக்கப்பெற்றதென்னும் பேச்சு

எங்கும் விரைவிற் பரவிற்று. என்னை ஜயரங்கபூபதியார் மணக்கப்போவதாகவும் வதந்தி வளர்ந்தது.

இந்நிலையில் ஒருபகல் அன்னையார் என்னறைபோந்தார். இன்று அவர் முகத்தில் இயற்கையாய மலர்ச்சியில்லை. அவர் கண்கள் சிவந்திருந்தன. வந்தவரை வழக்கம்போல் எழுந்துநின்று வரவேற்றேன். என்னைச் சிறிதுநேரம் உற்று நோக்கிக்கொண்டிருந்தாரேயன்றி, உட்காரும்படி என்னைப்பணிக்கவில்லை. இருந்தாற்போலிருந்து, "அடி பாவி, என் வீட்டையும் துடைக்கத்தான் வந்தனையோ" என்று கொடுமொழி கூறினார். அவ்வுரையில் தொடுக்கப்பெற்ற உம்மையின் பொருள் என் மனத்தில் ஊன்ற, அம்புண்டமான்போல் உள்ளம் துடித்து, "என் அன்னையேபோன்ற பெரியீர், இன்றுவரை யத்தொழில் புரிந்தறியேன். பழக்கமிலாவொரு கருமத்தை ஈண்டுப்புரியவும் வல்லேனல்லேன். தங்கள் சினத்திற்கு நான் ஆளான விதமும் தெரிந்திலது." என்று எதிருரைத்துக் கலங்கி நின்றேன்.

"அடி துரோகி, உன் நடன சாகசத்தைக் காட்டுவதற்கான அரங்கன்று இம்மனை. உன் உரையின் சதுரத்தைக் கேட்டு மகிழவும் நானிங்கு வந்தேனல்லேன். என் கோபத்திற்கு நீ ஆளானவிதம் அறியாயோ. அசைக்கவும் இயலாத அவன் மனத்தைக் கள்ளி நீ கவர்ந்துவிட்டாய். முன் மாமனை மயக்கி யவன் குடும்பத்தைக் குலைத்துவைத்தாய். இன்று இங்கு வந்து என் குடும்பத்தை வேர்களைய நினைத்தனைபோலும். நாங்கள் எத்தீங்கை உனக்கிழைத்தோம்...."

"அவனுன்னை நெருங்கினாலும், மறுப்பது நின்கடனன்றோ. பெண்ணினும் மேலாக உன்னை நான் கொண்டதற்கு நீ புரியும் கைம்மாறும் இதுவேயோ. உன்னை யாதரித்தார் மனமுளையவும், அவர் குலம் மாசுறவும் செய்துவைக்கத்தான் நீ கற்றனையோ. சோற்றுக்கடன் கழிக்கும்விதம் இதுதானோ. நன்று, நன்று; படு விஷத்தைக் கூசாது ஈயும் பாம்பினிற்கே நான் பால்வார்த்தேன்போலும்...."

"அடி பெண்ணே, போனது போகட்டும். இன்னும் கெட்டுவிடவில்லை. நன்றியறிதல் என்னும் குணம் உனக்கு உளதானால், என் குலம் பரிபவமொன்று முறாமல் நீ இப்பொழுதும் காத்திடலாம். நானும் உன் குற்றத்தை மன்னிப்பேன். நீ நல்லவளேயானால், உனக்கு மனச்சாட்சி யென்பதொன்றிருந்தால் இன்றே யகன்றுவிடு. அவனும் ஊரிலில்லை. இதுவே சமயம். வேண்டிய பொருளும் தருகின்றேன்" என்று சொரிந்து ஒய்ந்தார். அவர் வழங்கிய வன்சொற்கள் காது வழி புகுந்து என்னை வதைக்கவே, துடிக்கும் நான், "அன்னாய், செய்கின்றேன். அப்படியே செய்கின்றேன். என்னால் உங்கள் குலம் மாசுறவேண்டா. உங்கள் பொருளும் எனக்கு வேண்டா. என் தலையில் எழுதியுள்ள சிவனுமிருக்கின்றான். இன்றே யகல்கின்றேன், விடையுங் கொண்டேன்" என்று கூறி நினைவற்றுத் தரைசாய்ந்தேன். அகன்ற நினைவு மீண்டுவரக் கண் திறந்து நாற்புறமும் பார்த்தேன். அன்னையார் அகன்றுவிட்டார். மேஜையின்மேல் பணப்பை யொன்றிருந்தது. எழுந்தேன், நடந்தேன், மீண்டுமமர்ந்தேன், ஏங்கினேன்; பகல் இரவினைத் தொடர்வதுபோல் விடிவதற்கில்லாவோர் வெங்கண்ணிரவு புன்விதியே னென்னைச் சூழ்ந்துகொண்டது. என் அறையின் வெளிப்புறம் நோக்கினேன். உலகமே எனக்கு இருண்டது. வாழ்க்கை எனக்கு மூடிய புத்தகமேயானது; எல்லாம் பொய், காண்பதும் கயிற்றுப் பாம்பே என்று எண்ணிச் சிரிப்பொன்று சிரித்தேன். அவ்வேளை இந்திராணி என்னறையின்வாயிற்படியில் நின்றுகொண்டு என்னை நோக்கினாள். வந்தவளைச் சிறிது கூர்ந்து நோக்கி, "இளமையிலே, படிக்கவாவந்திருக்கின்றாய். நாம் படிப்பதும் படிப்பிப்பதும் போதும். எல்லாம் பொய். நீயும் பொய், நானும் பொய், நான்ஓதுவிப்பதும் பொய். குழந்தை நீ அறியாய், ஜயரங்கர் உள்பட எல்லாம் பொய்; போய்வருகின்றேன்" என்று கூறிக் கதவையடைத்துத் தாளிட்டேன். என் மெய்யே இரண்டாய்ப் பிளந்துவிடும்போல் என்னுள்ளம் துடித்தது. என் உடலம் காய்ந்தது. "ஐயகோ இந்நிலவுலகில் என்னைக் காப்பாரிலரோ என் செய்வேன். வைபத்துத் துக்கமெல்லாம் பாவியேன் என்பொருட்டே படைத்தனனோ மலரவன்நான். என் மாமன் உயிருக்கு உலைவைத்த கன்னெஞ்சக் காலனே, என் உயிரும் உடன்கொள்ள, உன் பெரும்பசி நெடுவயிற்றில் இடமற்றுப் போயினதோ, என் செய்வேன், எங்குச் செல்வேன். உன் பேழ்வாய்க் குரியபொருள் நான்ஆகேனோ. பெருந்தெய்வமே நீயும் கருணையற்றுப் போயினையோ," என்று அரற்றினளாய்க் கரைந்தேன், விழுந்தேன், புரண்டழுதேன், பெருகும் கண்ணீரால் தரை மெழுகினேன். மெழுகும் என் கரம் ஒன்றைப்பற்ற, அதை யெடுத்துப் பார்த்தேன். அன்றுகுடந்தையில் என்மாமன் மனையினில் நானெழுதி முடித்த என் மன்னவன் உருவப்படம் அது. அவ்வுருவத்தை நான் உற்று நோக்கினேன். என்னுள்ளம் அழிந்து, நீராய்க் கரைந்து வாய்வழி சொல்லாய்ப் பாய்ந்தது—

"என்னருமை ஜயரங்கா, பாய்கின்ற நின்னெழிலை ஒருநாள் அவள் பழித்தாள். சிறுமி யவளறியாள். புதியதொரு சாமுத்ரிகை நூலுக்கு இலக்கியமாய் நீ அமையாயோ. கார்வென்ற கருங்குழல் நின் தடந்தோள்படிந்து எழில்செய்ய, நின் பெருநயனத் திருநாட்டம் என் மார்பினிடைத் தவிசுகொள்ள அருள் சொரியும் ஒரு முறுவல் நின் திருவதனம் நடமாட யானையென நடந்து வந்து பாவியேன் துயரோட்ட, மன்னவா, என்னுயிரே வாராயோ, வந்தென்னைக்காவாயோ" என மாழ்கி, கலன் கழலும் என் கரத்தால் கனற்றுகின்ற என்னடிவயிறு பிசைந்தேன்.

"அல்லலுற்ற ஒரு பெண்ணை அன்று அஞ்சேல் அஞ்சேல் என்று கூறி ஒல்லைவந்து வில்லொடித்துக் காத்தளித்து, உன்கடன் ஆற்றிவைத்தாய் ஓ மனுகுலத் துதித்த வீர, இன்று நீ உன்கடன் மறந்து பெருந்தூக்கம் கொள்வது போதுமோ நின் பெருமைக்கு. எனது அன்னையை நீ காட்டிற்கு அகற்றியநாள், அவளொடு உடனகன்ற நின் கருணையும் உன்பால் மீண்டதில்லையோ...'

"பிறந்தவுடன் அப்பனையும் அன்னையையும் கொன்றுதின்ற தீவினையேன் பெற்றோர் அன்பில் தழைத்தேனில்லை. மாமன் மனையில் வளருங்காலை, கிள்ளைச் சிறுமியர் பெறும் வாழ்க்கைநலத்தைத் துய்த்தேனில்லை. பொல்லாவேளை யென்னைப்படைத்த பாவியவனும் என் ஆயுளெல்லை நீளச்செய்தான், எனவே நானும் ஆவிதுறக்கப் போவதுமில்லை. மாட்சிமனையற



கன்னி எனக்கு மறுத்தா னீசன், காதல்நலமும் சேயின்பேறும் பெறுவேனில்லை" என்று உருகிக்கரைய என்மடியிருந்த படம் கீழே விழுந்தது. அதை மீண்டுமெடுத்துப் பார்த்தேன். "பொல்லாத புன் வினைகள் என்பாற் புகுந்துசெய்யும் கொடுமையெலாம் பொய்யாகப் போமாறு வந்தென்பால் ஒரு வார்த்தை கூறாயோ, பெருமானே" என்று கூறி அழிந்தேன். பின், அப்படத்தை நோக்கினளாய், "அண்ணலே, ஜயரங்கா, அன்னையவர் சொல்லுமொரு பெண்ணவளை மணந்துகொள்வாய், மனம் வருந்தேன். உன்னொரு மகளாம் இராணிக்குச்சிற்றன்னையாகிவந்து உன்மனைக்கிழத்தி ஏவுகின்ற பணிகளை இழைப்பவளாய் உன் மனையில் உண்டிருந்து வாழ்வதற்கும் எளியள் நான் விழையவில்லை. உன் அன்னை மனங்குழைவார். மற்று உன்பால் நான் இரப்பதற்கும் ஒன்றுளது, அருள் சுரப்பாய். உன் நெஞ்சில் என் நினைவு நிலைத்திருக்க இடமொன்றே இரக்கின்றேன். அன்னையும் அகங்குழையார். ஈவையோ எனக்கு, அல்லது ஈதருள மறுப்பாயோ வள்ளலே, நீ என்னை மறந்தாலும் நானுன்னை மறக்கமாட்டேன்" என்று புலம்பினேன்.

இன்னபடி புலம்பிப் பின்விரைந்தெழுந்தேன். புது உறுதியொன்று என்னைப் பற்றியதுபோல் தோன்றியது. ஜயரங்க பூபதியின் உருவப்படம் பிறர்கைப் படாவண்ணம் காப்பதற்கு அதனைக் கிழித்தேன். பின் அவருக்கு ஒரு கடிதத்தை யெழுதினேன் :—

"எளியளென்பால் பேரருள் சுரந்த கற்பகத் தருவே, நின்னடி தொழுகின்றேன். உன் நிலையும் என்னிலையும் நோக்காது உன்னைச் சிறைகொண்ட என் பாபம் நான் அனுபவிக்கவேண்டாவோ. கொம்புத்தேன் முடவனுக்கு என்றும் வாய்த்ததில்லை. என்னை மருகியாய் உன் அன்னை பெறுவதால் அவருக்கும் உன் குலத்திற்கும் தீராத பரிபவமே வந்தடையும். நானுன்னைக் காதலித்தது உண்மையானால் அப்பரிபவம் உன் குலத்தைச் சேராவண்ணம் காப்பது என் கடனன்றோ. என் கடமை தெரிந்துகொண்டேன், எனவே, ஐய வருகின்றேன், விடையருள்வீர். என் கோவே, ஜயரங்க, கேளுடனும் கிளையுடனும் நீ இனிது வாழவேண்டி இறைவனை இறைஞ்சுவதே இனி எனக்குரிய கருமமாகும். செல்கின்றேன். யார்மீதும் குறையில்லை, கோபமில்லை. உன்னை யொருமுறை காணாது செல்கின்ற குறையல்லால்வேறொரு குறையுமில்லை. செல்கின்றேன், என்றும் உனக்கடிமை

தேவகி."

எழுதின இக்கடிதத்தைப் பலமுறைப் படித்துப் பின் மேல்விலாசமெழுதி என் மேஜையின்மீது வைத்தேன். இரவும் முதிர்ந்தது, ஊரோசையும் அடங்கிற்று. பேயும் கலங்குமக் காரிருளிற் சிறிதும் கலங்காது வெளியேறினேன். செல்லுமிடமும் வழியும் தெரியாதேன் என் கால் இழுத்தபடி நெடுவீதி நடக்கலானேன்.

நாய்கள் பல என்னை நோக்கிக் குரைத்தன. இந்நள்ளிரவில் மனிதராயினோரைக் கலங்கச் செய்ய எச்சிறு அரவமும் போதும். எனினும் குரைக்கும் இந்நாய்கள் என்னை அச்சமுறச் செய்யவில்லை. நள்ளிரவின் தனிமையென நடந்தேகும் யான் இந்நாய்களின் ஊளையையும் வரவேற்றேன். கிளையடர்ந்த மரங்களின் பொந்துகளில் புகுந்திருக்கும் கூகைகள் வன்னெஞ்சக் கள்வரும் கலங்கும்வண்ணம் கூவின. அவை கூவிய குழறலெலாம் என்னைச் சிரிக்கவே செய்தன. கழுத்தளவு பெருவெள்ளம் வந்தக்கால் அழுவாரும் அஞ்சுவாரும் இருப்பர். வெள்ளம் வாயளவு வந்தபின் யாரழுவர். ஒரு சிரிப்பொன்று சிரித்தவளாய் விரைந்து நடந்தேன்.

என் வாழ்க்கையெனக் கருத்தவோர் மேகம் இருந்தாற்போலிருந்து விண்ணைக் கவர்ந்தது. காற்றொன்று கடுமையுடன் வீசுதலும், மரங்களெல்லாம் கட்குடியர்போல் நிலைகுலைந்தாடின. விண்ணிற் படர்ந்த கருமேகம்காற்றினால்ஏற்றுண்டு பிரளயத்தின் ஓதையென இடித்தது. பிரளயத்தின் பிரளயமென நானும் கடுகடுத்துப் போக்கினேன் ஒரு சிரிப்பு. இடியைத் தொடர்ந்த மழை எனக்கஞ்சிக் கரையும் கார்க்குலத்தின் கண்ணீரோ என நினைத்தேன். மழையையும் இடியையும்மதியாது நெடுவழி நடந்த நான் கடைசியில் அக்கங்குலின் கரையைக் காணலானேன். உதயகிரிதோன்றிய கதிரவனும் விரைந்து வானின் நடுவடைந்தான். என் பொல்லாவயிறு, தீனி தேடிற்று. பசியின்கொடுமையைத்தணிக்கஎண்ணிவழியிலிருந்த ஒருவீட்டையெய்தி, ஒரு கவளம் சோற்றிற்கு இரந்து நின்றேன். வந்தவொரு பெண்மகள், திறந்திருந்த கதவை அடைத்துச்சென்றாள். வேறொரு வீடு சென்றேன். அங்குஆடியிருந்த சில பெண்மக்கள் என்னை எள்ளி நகைத்தனர். 'பித்துப் பிடித்தவள்' இவள் என்றாள் ஒருத்தி. 'இப்பித்தினில் கருமமுமிருக்கலாம், யார் கண்டார்' என்றாள் மற்றொருத்தி. 'சென்னையில் ஒரு கொள்ளைக் கூட்டத்தார் இப்படித்தான் உளவு தெரிகின்றனராம்' என்றாள் ஒருத்தி. இவர்களைவிட்டு வேறொரு தெருவினையடைந்தேன். 'நீ கிழமா, குருடா, முடமா, வேலைசெய்து தின்னலாகாதோ' என்று எனக்கு அங்கு உபதேசம் செய்தனர். வேறு இரண்டுமூன்று வீடுகள் சென்று பார்த்தேன்; என் வயிறோ நிறையவில்லை. என்பொருட்டு மாந்தர் ஈதல் என்னும் அறத்தைத் துறந்தனரோ என்று மனம் நொந்தேன். பெண்மைக்குரிய கருணையை இப் பெண்மக்கள் எங்குகுத்தாரோ? இல்லை, முன்னேற்றம் மிக அடைந்திருக்கின்றார் பெண்மக்கள். அவர்கள் என்செய்வார் பாவம். மக்களைச் சோம்பேறிகளாக்குதல் கூடுமோ? நொண்டி, குருடு கிழங்களுக்கு விடுதிகள் அமைப்பதற்கான வேலையையுடையஸ்தலஸ்தாபனங்களை அமைத்தபின் ஈதலும் வேண்டுமோ. வரிகள் செலுத்தவில்லையோ? கூட்டங் கூடவில்லையோ. எனவே, ஈயமாட்டார்கள். பொருளாதார நூல்களும் ஈயச்சொல்லவில்லை. "என்னை வருத்தும் வயிறே, சிறிது பொறுப்பாய். ஊருக்கருகில் ஆறுண்டு, குளமுண்டு. அள்ளிக் குடிக்கலாம். யாரும் முகஞ்சுளியார்" என்று கூறி, சோரும் என் உடலை இழுத்துக்கொண்டு ஊருக்கு அப்பால் நடந்தேன். அங்கொரு குளமும், விநாயகர் கோயிலும் இருந்தது. அங்குச் சென்று தண்ணீரை அள்ளிக் குடித்துவிட்டுக் கோயிலின் ஒருபுறம் முன்றானையை விரித்துக்கொண்டே படுத்தேன், தூங்கிவிட்டேன்.

மாலையில் குளத்திற்கு வருவார் என்னைச் சூழ்ந்துகொண்டு செய்த அரவத்தால் துயில்கலைந்து கண் விழித்தேன். ஒரு மகன் என்பால் நெருங்கி, 'அம்மே, நீ யார்? எவ்வூர்? சிறு பெண் நீ குளக்கரையில் தன்னந் தனியளாய்த் தூங்குவானேன்" என்று கேட்

டான். அவனைச் சீறிநோக்கி, "உனது கருமமல்லாக் காரியத்தில் நீ ஏனையா தலையிடுகின்றாய். வன்னெஞ்சின் இருப்பிடமான பெண்ணினத்தைச் சேர்ந்தவள். நானொருத்தி தன்னந்தனி யிருப்பதால் யாருக்கும் கேடுசூழ வியலாது-" என்று கூறி அவ்விடம் விடுத்து நடந்தேன். பசியின் களைப்பு அதிகமாக வதிகமாக என்னால் வழி நடக்க இயலவில்லை. சூரியனும் மேருமலை யெய்தினான். இளைத்த என் கால்களும் ஒன்றுடனொன்று பின்னிக்கொண்டன. மேல் அடிபெயர்த்து வைக்கமாட்டாது ஒரு குடிசையினருகில் விழுந்து விட்டேன்.

அக்குடிசையினுள்ளிருந்து ஓர் மாது வெளிவந்து என்னை யுற்றுநோக்கி, மிக இரங்கிப் பரிவுடன் சில மொழிகள் கூறினாள். உள்ளழைத்துச் சென்று அன்னமிட்டாள். இன்னும் பெண்மக்கள்பால் கருணையும் இருக்கின்றதோ என்று எண்ணி யெண்ணிவியந்தேன். அம்மாதை முன்னேற்ற இயக்கங்களும் வர்த்தமானப் பத்திரிகைகளும் இன்னும் பற்றவில்லைபோலும். உண்டபின் அவள் வினாக்களுக்கு விடையாக, "நானோர் ஏழை. இளமையிலேயே பெற்றோரை யிழந்தேன். பின் என்னை வளர்த்த மாமனும் இறந்தார். அவ ரிறக்கவே ஆதரிப்பாரில்லாமல் ஊரூரா யலைகின்றேன்." என்று கூறினேன். அம்மாதும், "இனி நீ என் மகள்போல் இங்கேயே இரு" என்றாள். அங்குச் சில நாள் தங்கினேன். அம்மாதினிற்கு வயது நாற்பதிருக்கும்.எனினும், அவள் தோற்றம்இளமையையே காட்டிற்று. அவள் வீட்டிற்கு இளைஞர் பலர் அடிக்கடி வந்துபோயினர். அவளைப்பற்றி எதையும் என்னால் தெரிந்துகொள்ள இயலவில்லை. ஒரு வேலையாளனும், ஒருவேலைக்காரக் கிழவியும் அவள் மனையினில் இருந்தனர். குடிசை சிறிதேயாயினும் இவளது வாழ்க்கையில் ஆடம்பரம் துலங்கிற்று. உண்பதும் உறங்குவதுமாய் ஒருமாத காலத்தை இம்மனையினில் கழித்தேன். அவளும் என்னிடம் மிக மிக நெருங்கிப்பழகி வந்தாள். "உன்னனைய எழிலுடைய ஒரு பெண் ஏன் இப்படிக் கஷ்டப்பட வேண்டும். என் பெண்ணென உன்னைக் கொண்டேன். இனி உன் நலனே யென் நலன். இளமையும் எழிலும் போனால் வராது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும்" என்று அமயம் நேரும்போதெல்லாம் அவள் கூறி வந்த மொழிகளின் பொருள்எனக்கு மெல்லமெல்ல விளங்கவே இனி அங்கிருக்கலாகாதென்று நிச்சயம் செய்துகொண்டு ஓரிரவு வெளியேறினேன்.வெளியேறின எனக்கு இனி எங்குச் செல்வதென்று தெரியவில்லை. உலக மனைத்துமே என்மேற் பகைகொண்டு வருத்துவது போற்றோன்றிற்று. குளத்தங்கரை சென்று ஓரரசமரத்தடியில் உட்கார்ந்தேன். என் நிலையை உன்னினேன். என் தலை வெடித்துவிடும்போல் இடித்தது. இனி உயிர் வாழ்தலில் பயனில்லை என்றெண்ணித் துண்ணென எழுந்து ஒரு மரக்கிளையில் ஏறி ஜயரங்க பூபதியை நினைத்து, அந்நெடுநீரில்பாய்ந்துவிட்டேன்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[313-வது பக்கத் தொடர்ச்சி]

### (IX) அப்பரும், சுட்டு எழுத்தும்

### I. பவணந்தி கூறும் இலக்கண விதி

சுட்டெழுத்திற்கு இலக்கணம்கூறுங்கால், பவணந்தி எழுத்தியலில்

"அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே" என்றார்.
(நன்னூல் - எழுத்தியல் 11.)

எனவே தனித்துவரின் என்பது, பின்வரும் உதாரணங்களில் அகர இகரங்கள் குறிப்பிட்டன போல் வன என்றாம்:—

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்ல னொருவம னல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமுமவ
னருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே
—திருவினைத் திருத்தாண்டகம் 10.

"அந்நிறம்" என்பதில் 'அ' என்பது அச்சொற்றொடருக்கு முன்னர்த் தனியே வந்ததால் அதைச் சுட்டு என்னல் வேண்டும். அவ்வாறு கூறுவோமாயின், இவன் என்பதில் இகரம் சுட்டென்ன இடமிரா தென்றெண்ணி நன்னூல் உரையாசிரியர்கள் அ இ உ என்னும் மூன்றெழுத்தும் "மொழிக்குப் புறத்தும் அகத்தும் முதற்கண் தனித்துச் சுட்டுப் பொருளுணர்த்த வரில் சுட்டெழுத்தாம்" என்றனர். இதிலுள்ள பிழை "தனித்து" என்னும் சொல்லேயாம். 'இவன்' என்னும் சொல்லில் இகரத்தைத் தனித்துத் துணித்து அப்புறம் வைப்பின் எஞ்சி நின்றது 'அன்' என்னும் விகுதியே யன்றி, சுட்டுப்பொருளுணர்த்தப் பெயர்ச் சொல்லில்லை. மொழிக்குப் புறத்தும் அகத்தும் முதற்கண் சுட்டுப்பொருளுணர்த்த வருவது சுட்டெழுத்தெனின், யாதொரு ஆட்சேபமும் நேராது. தொல்காப்பியனார் சூத்திரமாகிய

"அ, இ, உ அம்மூன்றும் சுட்டு"

என்பதை அவ்வாறே எழுதிவிடாமல், அதைச் சீர்திருத்துவதுபோல் பவணந்தி "முதல் தனிவரில்" என்னும்சொற்றொடர் சேர்த்த சேஷ்டையால் வந்தது பெருங்குற்றமென்பது வெளிப்படை. கல்விமிக்க சங்கர நமச்சிவாயர் போன்ற உரையாசிரியர்கள், இக்குற்றங்களை வெட்டிப் புறங்களையாமல் உரையிற்கோடலென்னும் கருவிபெற்றோமென்று மற்றும் பல சூத்திரங்களில் எழுதும் விதம்போல இப்பவணந்தியின் சூத்திரத்திற்கு உரை யெழுதியது நமது மொழியும் நமது நாடும் செய்த தவமேயாம்!

பவணந்தியின் சூத்திரம் கூறியிருப்பதுபோல் அத்துணைச் சுருக்கத்தில் நமது தமிழில் சுட்டெழுத்துக்களின் விஷயங்கள் முடியவில்லை. அவற்றைத் தொல்காப்பியக் கருவியால் ஆராய்வோம். அவையாவன:



சுட்டுமுத லுகரம் அன்னொடு சிவணி
யொட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே
(தொல் - உருபியல் 4)

சுட்டுமுத லாகிய ஐயென் னிறுதி
அற்றொடு சிவணி நிற்றலு முரித்தே (ஷை 5)

அது என்பது அன் என்னும் சாரியையுடன் சேர்ந்து தனது தகரமெய்யும் உகரமும் கெடுவதும், அதன் பன்மையான அவை யென்பது அற்றொடு சேருங்கால் யாதும் கெடாது அவையற்றை, அவையற்றோடு, இவையற்றை, என நிற்றலும் உளவென்பதை இவ்விதிகள் விளக்குகின்றன. மற்றும், எண்மூவெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும் முன்வரும் ஞநமயவக்கள் இயல்புப் புணர்ச்சிக்கு முரணாக

"சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய வொற்றிடை மிகுதல் வேண்டும்.
(தொல் - உயிர் மயங்கியல் 3)

இதற்கு உதாரணம் இ + மாயம் = இம்மாயம். அ + விரை = அவ்விரை*

*விண்டெ லாமல ரவ்விரை நாறுதண் தேன்விம்மி
வண்டெ லாம்நகை யாலிசை பாடும் வலஞ்சுழித்
'தொண்டெ லாம்பர வுஞ்சுடர்போலொளியீர்சொலீர்
பண்டெ லாம்பலி தேர்ந்தொலி பாடல் பயின்றதே.
—சம்பந்தர்.

இம்மாயப் பிறப்பென்னுங் கடலாந் துன்பத்
திடைச்சுழிப்பட் டிளைப்பேனை யிளையா வண்ணம்
கைம்மான மனத்துதவிக் கருணை செய்து
காதலரு ளவைவைத்தாய் காண நில்லாய்
வெம்மான மதகரியி னுரிவை போர்த்த
வேதியனே தென்னானைக் காவுள் மேய
அம்மானின் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே.
திருவானைக்கா - திருத்தாண்டகம் 5.

"சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்
யாவினா முதலிய மென்றொடர் மொழியும்
ஆயியல் திரியா வல்லெழுத் தியற்கை"
தொல் - குற்றியலுகரப் புணரியல் 47.

சாதாரணமாய் மென்றொடர்மொழிக் குற்றியலுகர ஈற்று வினையெச்சம் வருமொழி முதலில் வல்லெழுத்து வரினும், வல்லெழுத்து மிகாது இயல்பாதலால், சுட்டுப் பெயரின் சுட்டுச் சினை நீண்ட மென்றொடர்க் குற்றுகர ஈற்றின் முன்னர் வல்லெழுத்து மிகும் என்பர் (உ - ம்) ஆங்குக் கொண்டான், ஈங்குச் சென்றான்—இத்தகை உதாரணங்கள் தேவாரத்தில் காணலாம்.

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[335-வது பக்கத் தொடர்ச்சி]

### தீயதன் தீமை காணா னரக்கன்.

தவத்தாற்றில் அறத்துறை நின்ற நீர்மையால் வெஃகியன யாவும் இராவணனுக்கு முன் வந்தெய்தின வென்னும் வாய்மையை எடுத்துக்காட்டி நல்லதன் நன்மையை வற்புறுத்திய மாரீசன் அதன்பின் தீயதன் தீமையையும் வகுத்துரைக்க நினைத்தனனாகி,

நாரங் கொண்டார் நாடு கவர்ந்தார் நடையல்லா
வாரங்கொண்டார் மற்றொரு வர்க்காய் மனைவாழுந்
தாரங் கொண்டா ரென்றிவர் தம்மைத் தருமந்தா
னீருங் கண்டாய் கண்டக ருய்ந்தா ரெவரையா

[அன்புடன் நம்பிக்கை வைத்தவர்களது நாட்டினைக் கவர்ந்துகொண்டவர், நீதியல்லாத குடியிறைப் பொருள்களை வலிந்து கவர்ந்துகொண்டவர், வேறு ஒருவனுக்கு உரியவளாய் அவனுடன் வீட்டில் வாழும் மனைவியைக் கவர்ந்துகொண்டவர், என்னும் இன்னவர்களைத் தருமமானது அறுத்து அழித்துவிடும். ஐயனே, துஷ்டர்களில் கேடடையாமல் தப்பினவர் யார் இருக்கின்றார்]

எனக் கேட்கின்றனன். சொல்லாய்ந்தோதியுள மறைவல்லோனாகிய இராவணன் இதற்கு எவ்வகை எதிருரைப்பான். கண்டகரில் உய்ந்தாரிவரென்று காட்டலரிது. எனினும் இதனை ஒவ்வாதாருமில்லை, ஒவ்வியபடி ஒழுகினாருமில்லை. நாசம்வந் துற்றகாலை முன்னின்ற நன்மதியனைத்தும் நழுவிப்போம். தன் இறுதிக் காலத்துள் எடுத்தடிவைக்கின்ற இராவணன்றன் இருபது செவிகளூடும், இப்பொருளுரை இறையுந் தங்காது உருவிச்சென்று, பண்டைநாள் இவன் பாட்டியின் இருண்ட மார்பிடை இராகவன் ஏவிய வாளியே என்னப் போய்விட்டது. இராவணன் புல்லனே, ஆயினுங் கல்லாத புல்லனல்லன். எனினும் என்! போகூழ் புகுங்கால் முடுகிப் போய்விட்டது முன் கற்ற கல்வியே. ஆதலின் இந்நிலையிலிருந்த இராவணனுக்கு உதாரணம் ஒன்று ஓதுவது தக்கதென மதித்த மாரீசன்,

அந்தர முற்றா னகலிகை பொற்பா லழிவுற்றான்
இந்திர னொப்பா ரெத்தனை யோர்தா மிழிவுற்றார்
செந்திரு வொப்பா ரெத்தனை யோர்நின் றிருவுண்பார்
மந்திர மற்றா ருற்றது ரைத்தாய் மதியற்றாய்

[தேவலோகத்தை அடைந்திருந்த இந்திரன் அகலிகையின் அழகால் நாசமடைந்தான். அவ்விந்திரனைப் போன்ற இன்னும் எத்தனையோ பேர்கள் பிறன் மனைவியைவிழைந்து இழிவடைந்தனர். சிவந்த இலக்குமியைப் போன்ற உன்தேவிமார் பலர் உன் அழகை அநுபவிக்க இருக்கின்றனர். அவர்களை விட்டுச் சீதையை நாடவேண்டுமென்று ஆலோசனையற்றவர்க் குரிய வார்த்தையை மதி கெட்டவனே சொன்னாய் நீ]

எனத் தெழித்தனன். இராவணன் சிந்தையில் இவ்வுதாரணம் எவ்வகை நினைவை எழுப்பியதோ, உரைத்த லருமை. பழியொன்று அடைதலினும் அழிவு வேறில்லை என்னுமொரு மானத்தை நினைந்து போற்றும் மனத்தின னல்லன் இவன். ஆதலின்

எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி

என்னும் நீர்மைக்கும் இவனுக்கும் இக்காலம் நெடுந்தூரமுளது. எனின், "ஆயிரங் கண்கள் தன் மெய்யிற் காணப்பெற்றதல்லால் புரந்தரன் எவ்வழிவுற்றான்" என்று மாரீசனை மறித்துக் கேட்டிருப்பானாயின், அக்கொடியோன் கூற்றிற்கு எதிர்மாற்றம் தரவாற்றாது அம்மாதுலன் நாவோ வறண்டிருக்கும். பழியஞ்சாப் பாதகர்க்குப் பதிலுரைத்தல் இம்மாநிலத்தில் இயல்வதொன்றன்று. [illegible]லோர் மொழிகளைத் தீயோர்தாம் [illegible] தீமைக்கே உரிமையாக்கிக்

கொள்வார். அந்நுட்பத்தை இராவணனிடத்தில் நன்கு காணலாம். "நீ இதுகாறும்பெற்றிருக்கின்றபெருஞ்செல்வமனைத்தும் அறத்தாற்பெற்றதேயன்றோ" என்பதை இயம்பி, "மற்று, இந்திரனும் மறத்தால் அழிவுற்றானல்லனோ" என்பதையுங் காட்டினான் மாரீசன். இராவணன் இச்சொற்களை மறந்திலன். ஐயிருதிங்கள் கழிந்தபின், முதற்போர் தோற்றநாள், தன் சிறையிருந்த சீதையை நண்ணி (மாயா சனகப் படலத்தில்) மோகம் முதிர்ந்த சில மொழிகள் கூசாது கூறத்துணிந்த காலத்து, "அறந்தரும் செல்வமன்னீர்" என அவளை அழைப்பவனாகின்றான். "வேள்வி தவம் அனைய அறங்களைச் செய்தன்றோ பெற்றனை செல்வம்," என்று மாரீசன் இங்குக் கேட்ட கேள்விக்குத் திங்கள் பத்துஞ் சென்றபின் அங்கு இலங்கையில், "ஆம், ஆம், அந்த அறங்கள் தரும் செல்வங்களில், அயலான் மனைவியாம் இச்சீதையும் ஒன்று" எனத் தேறினான்போல் தனது இயற்கைக்கியைந்தவண்ணம் இராவணன் அமைதிநாடி அவளை அழைக்கின்றான் என்னல் வேண்டும். "வேண்டிய வேண்டியாங்கெய்தும் பயன் செய்தவத்திற்கு உண்மையே யாதலின் யான் விழைந்த இப்பிறன்மனையையும் எய்தல்வேண்டாவோ" என்னுந் துணிவினாலேயே, சானகியை அவன் அறந்தரு செல்வ மன்னவளாய்க் காணநேர்கின்றனன். இவ் விராவணன்போன்ற விதியில்லா மதியிலிகளைத் தெருட்டுமாறே, அறஞ்செய்து எய்திய வொன்றன் பயனாய் இன்பங்கள் வருதற்கியலுமென்னும் நினைவை, அவைதாம் புகழிலாப் புறத்த எனவெறுத்து, மறுத்து, "அறத்தால் வருவதே இன்பம்" என வள்ளுவர் சாற்றினார். அதனை விடுத்து, இன்பத்தின்பொருட்டே அறத்தைச்செய்கவென்று அவர் அறைந்தாரென்னக் கருதுதற்கே இராவணன்றன் கரவுடைய நெஞ்சம் இணங்குகின்றது.

நல்லதன் நன்மையைப்பற்றி மாரீசன் உரைத்தவைகள் நாசமுறு மொய்ம்பனும் இம்மருகற்குப் பயன்பட்ட விதம் இதுவாயின், தீயதன் தீமையை இவன் திரிக்கின்ற வண்ணமும் நல்லோர் மனத்தைத் திகைப்புறச் செய்யவல்லது. "அகலிகை பொற்பால் அழிவுற்றார் இந்திரனைப்பார் எத்தனையோர் தாழ்வுற்றார்" என மாரீசன் இங்குத் தன்னைக் கேட்டதை நினைவில் வைத்துக்கொண்டு, அங்கு அவ்வசோக வனத்திருந்த "சீதையை அறந்தரு செல்வமன்னீர்' என அழைத்த இவன் மீண்டும் அவளை நோக்கி,

அந்தர முனிவன் மேனா ளகலிகை யென்பாள் காதல்
இந்திர னுரத்தை நல்கி யெய்தின ளிழுக்குற் றாளோ
மந்திரமில்லை வேறோர் மருந்தில்லை மைய னோய்க்குச்
சுந்தரக் குமுதச் செவ்வா யமுதலா லமுதச் சொல் [லீர்

[அமுதம் போன்ற சொற்களையுடையவளே, காம நோய்க்கு, உன் அழகிய குமுதம்போன்ற வாயிலிருந்து ஊறுகின்ற அமிர்தம் அன்றி வேறோர் மருந்தில்லை, மந்திரமும் இல்லை. முடிவாகக் கூறுமிடத்து, பண்டைநாள் அகலிகைஎன்பவள் காதலுடையஇந்திரனுடைய மார்பை அளப்பரிய ஆசையுடன் சேர்ந்தாள். அதனால் அவள் ஏதேனும் இழுக்கு உற்றாளோ - இல்லையே] - (நல்கல்- ஆசைப் பெருக்கம் அடைதல்).

எனக் கழறிக் காட்டுகின்றான். தன்பால் வந்த இந்திரனை ஆசைபெருகஎய்தித்தழுவினாள் அகலிகைஎன்று கூறுவதற்கு இராவணன் அவள் சரிதையை வான்மீகத்தினின்று தெரிந்துகொண்டவனா யிருத்தல்வேண்டும். அந்நூலினுள் அவள், "மதிஞ்சகார துர்மேதா தேவராஜ குதூகலாத்" என முனிவரால் வசையுண்பதற்குரியளாய் நின்று, "ஸுரச்ரேஷ்டம் க்ருதார்த்தே நாந்தராத்மனம்" என வாசவனைப் பள்ளிக்கு வரவேற்றுப் பின், "க்ருதார்த்தாஸ்மி ஸுரச்ரேஷ்ட கச்சசீக்ர மித ப்ரபோ" எனப் பரிந்தனுப்பிய பரிசிற்கே, இங்கு இராவணன், "அகலிகை யென்பாள் காதல் இந்திரன் உரத்தை நல்கி யெய்தினள்" எனச் சாற்றிய பழிபடு முறைமை இயைவதாகும். மற்று, கம்பரது காட்சியின்படி, அம் மாதவப் பன்னியின் மனக் குறிப்பும் குற்றமும் எவ்வாறாயினும், கோசிகனனைய முனிவரால், "நெஞ்சினால் பிழைப்பிலாதாள்" என்று பேசுதற்குரியவளாயிருக்க, அன்னதனைச்சார்ந்து இசைக்கவேண்டிய இத்தமிழ் இராவணன், சோரநாயகனை அவள் நயந்து சேர்ந்தனள் எனப்பகர்வது, தான் புரிவதற்கு நயந்துநிற்குமொரு மாபெரும் பாதகத்தின்பால் சீதையைத் துணிவுறுத்தித் தூண்டுதற்கமைந்த பொய்யாயிருப்பினும் புதுமையன்று. ஆயினும், இச்செவ்வியில் ஆராயக்கிடப்பது அதுவன்றி, மாரீசன் தனக்குரைத்தவொன்றைத்தன் புல்லியமனத்தின் விழைவிற்குத் தக்கபடி இராவணன் மாற்றிக்கொண்டதோர் தன்மையேயாம். அகலிகையின் பொற்பினது நலத்தினை இந்திரன் உண்டனனென்றேஇவ்விராவணன் உணர்ந்தானன்றி அதனால்அவன் அழிவுற்றபடியொன்றும் இவனுக்குத் தோன்றியதில்லை. அதுகிடக்க, தீயதன் தீமைக்கு உதாரணமாக இந்திரனை மாரீசன் எடுத்துக் காட்டுவானெனின், இராவணன், தீயதாற் றீமையில்லை என்பதற் குதாரணமாக அவ்வகலிகையைச் சீதைக்கு எடுத்துக்காட்டுங் கொள்கை இவ் வரக்கனனைய கயமைமிகு கொடியோர்க்கே ஏற்புடைத்தாகும். இங்குமாரீசன் உரைத்த பாசுரத்தின் நினைவினாலே அங்கு இராவணன் அப்பாசுரம் உரைத்தனன் என்பதற்கு "அந்தர, இந்திர, மந்திர," என மூன்று எதுகைச்சொற்கள் இவ்விரண்டு பாசுரங்களுக்கும் பொதுவாயிருப்பது சான்றாதல் கூடும்,

நல்லதன் நலத்தையும் தீயதன் தீமையும் இவ்வண்ணம் எடுத்துக்காட்டி மாரீசன் முதுக்குறைவு பேசினனாலும், இராவணன் அவைகளை ஏற்றுக்கொண்ட பரிசு அவன் பழியுடை முகங்கள் பத்தினுள் ஒன்றிலேனும் தோன்றியதில்லையாக, இனி அறத்தின் திறத்தினை உரைப்பது விடுத்து, "அறத்திற்கு அஞ்சலையேனும் அண்ணல் இராமன் திறத்திற்கேனும் நீ அஞ்சுதல் வேண்டும்" என்று மேலும் பகர்வான்,

செய்தா யேனுந் தீவினை யோடும் பழியல்லால்
எய்தா தெய்தா தெய்தினி ராம னுலகீன்றான்
வைதா லன்ன வாளிகள் கொண்டும் வழியோடும்
கொய்தானன்றே கொற்ற முடித்தன் குழுவெல்லாம்

[இக்காரியத்தை நீ செய்யப் புகுவாயாயினும், பாவமும் பழியும் வருமேயல்லாமல் உன் ஆசை நிறைவேறாது. நீ அங்குச் செல்வாயாயின், உலகத்தைப் படைத்த பிரம்மன் இட்ட சாபம் போன்று தவறாத பாணங்கள் கொண்டு இராமன், உனது வமிசத்துடனே உன் கூட்டத்தையெல்லாம் வலிமையழித்து உன்னைத் தொலைத்து விடுவான்; நிச்சயம்]

இதனையும் மறுத்து இராவணன் பத்துச் சிரங்களும் அசைந்தனபோலும்.



என்றா லென்னே யெண்ணலை யேநீ கரனென்பா
னின்றா னைக்கு மேலுள னென்னு நிலையம்மா
தன்றா னைக்குற் றாரொடு மாளத் தனுவொன்றாற்
கொன்றான் முற்றுங் கொல்ல மனத்திற் குறிகொ [ண்டான்

[நான் என்ன சொன்னாலும் ஏனோ நீ அதனை மதிக்க மாட்டேனென்கின்றாய். ஐயோ! உன் சைனியத்தை விட அதிகம் உடையவன் என்ற நிலையில் இருந்த கரன் என்பவன், தன் சைனியத்திலிருக்குந் தகுதிவாய்ந்த வீரர்களோடு மாளும்படி வில்லொன்றால் கொன்றவனாகிய இராமன் அரக்கர் இனம் முழுவதையுங் கொல்ல மனத்திற் கருதியிருக்கின்றான்]

வெய்யோர் யாரே வீர
விராதன் றனைவெய்யோர்
ஐயோ போனா னம்பொடு
மும்பர்க் கவனென்றா
லுய்வார் யாரே நம்மி
லெனக்கொண் டுணர்தோறு
நையா நின்றே னீயி
துரைத்து நலிவாயோ.

[கொடியவர்களில், வீரவிராதனளவு கொடியவர் யார் இருக்கின்றனர்! ஐயோ, அவனும் இராமனது அம்பினால் மேலுலகம் சேர்ந்துவிட்டான் என்றால், நம்மில் இராமபாணத்திற்குத் தப்பிப்பிழைக்கவல்லர் யாருளர்என்பதை நினைக்கும்போதெல்லாம் மனந் தளர்கின்றேன். நீ இவ் வார்த்தைகளைச் சொல்லி மேலும் என்னை வருத்துவாயோ]

மாண்டார் மாண்டார் நீயினி
மாள்வார் தொழில்செய்ய
வேண்டா வேண்டா செய்கெனி
னுய்வான் விதியுண்டோ
ஆண்டா ராண்டா ரெத்தனை
பேர்கோ வறநோனார்
ஈண்டா ரீண்டார் நின்றவ
ரெல்லா மிலரன்றோ

[இறந்தவர் இறந்தனர். நீயும் இனிச் சாகின்றவர்கள் செய்யுந் தொழில் செய்யவேண்டா. செய்யத்தான் செய்வேன் என்றால் அது செய்து பிழைக்கவல்ல விதிதான் உளதோ! ஒருவர்பின் ஒருவராய் ஆண்டு ஆண்டு அழிந்தவர் எத்தனைபேர் என்பேன். தருமத்தைக் காக்கக்கருதாதவர் ஆக்கம் அடையமாட்டார்; இவ்வுலகிலே நிலைபெற்றிருந்தவர் யார், எல்லாரும் இல்லாமற் போனவர்களே - ஆதலின் மறுமை ஒன்று உண்டென்பதையும் நினைக்க வேண்டாவோ]

எம்பிக் கும்மென் னன்னை தனக்கு மிறுதிக்கோ
ரம்புய்க் கும்போர் வில்லி தனுக்கு மயனிற்குந்
தம்பிக் குந்நம் மாண்மை தவிர்ந்தே சயநிற்குங்
கம்பிக் கும்மென் னெஞ்சவ னென்றே கவல்கின்றேன்

[என் தம்பியாகிய சுபாகுவுக்கும் என்தாயாகியதாடகைக்கும் இறுதி உண்டாம்படி ஒப்பற்ற பாணத்தைச் செலுத்திய போர்வல்ல வில்லுடைய இராமனுக்கும் அவன் பக்கத்தில் நிற்கும் தம்பி இலக்குவனுக்கும், நம் ஆண்மை அழிந்து அவர்களுக்கே வெற்றி நிலைநிற்கும். அத்தன்மையன் இராமன் என்றே நடுங்குகின்ற என் மனத்தில் கவலைப்படுகின்றேன்]

நின்றுஞ் சென்றும் வாழ்வன
யாவுந் நிலையாவால்
பொன்றும் மென்றும் மெய்ம்மை
யுணர்ந்தாம் புலையாடற்
கொன்றும் முன்னா யென்னுரை
கொள்ளா யுயர்செல்வத்
தென்றும் மென்றும் வைகுதி
யையா வினியென்றான்

[இருக்கின்ற சராசரப் பொருள்கள் யாவும் நிலைப்பதின்றி எப்பொழுதும் அழிந்துவிடும் என்ற உண்மையை அறிந்துளோம். ஆகையால், ஐயனே, நீ இழிவுடைய தொழில் செய்வதற்கும் சிறிதும் எண்ணாமல், உன் சிறந்த செல்வத்திலே என்றும் நிலைத்து வாழ்வாய் - என்றான் மாரீசன்]

இவ்வண்ணம், நன்மையாலன்றி இன்பமில தென்றும் தீமையாற் றுன்பமே புகுமென்றும், இவ்விரண்டையும் மதியாமல் இராவணன் பிறன்மனை வெளவப்புகுந்தானேனும் அண்ணல் இராகவன்றன் வில்லிற் கெதிர் நிற்க ஆற்றானென்றும் மாரீசன் பகர்ந்தவை யனைத்துங்கேட்ட இராவணன், முன்னைய இரண்டின் உண்மையை மறுத்துரைக்க நினைப்பதின்றியே, தன்னொருமிடலின் தனிப்பெருந் தன்மையைச் சாற்றி யாவரையுந் தான் வெல்ல வல்லனென்பதற்குச் சான்று பகர்வதே போதுமெனக்கருதி,

கங்கைசடை வைத்தவ னெடுங்கயிலை வெற்போ
ரங்கையி னெடுத்தவெ னதாடெழின் மணித்தோ
ளிங்கொர்மனி தற்கெளிய வென்றனை யெனத்தன்
வெங்கணெ ரியப்புருவ மீதுற விடைத்தான்.

[கங்காநதியைச் சடையில் தரித்த சிவபிரானுடன் கைலைமலையை ஒரு உள்ளங்கையில் எடுத்த எனது வெற்றி பொருந்திய அழகிய மணிபோன்ற தோள் இப்பொழுது ஒருமனிதனுக்கு இளைத்துத் தோற்கும் என்று சொன்னாய் நீ! என்று கூறித் தன் கொடிய கண்கள் தீப்போல் எரியவும், புருவங்கள் நெறித்து நெற்றியின்மேல் ஏறவும், கோபங்கொண்டான்]

கைலையைக் கையாற் பெயர்த்த பெருமையைப் பகர்வதற் கிவ்வரக்கன் சோர்வதில்லை. இவ்வண்ணம், செயற்கரிய சில செய்த பெரியராய்த் தம்மைப் பேசிக்கொள்பவர் இராவணனன்றியும் எங்கும் எஞ்ஞான்றும் பலருளர். "அதனைச் செய்த எனக்கு இவ்விராமனை வெல்லல் அரியதாகுமோ" என்று மாரீசனை வெகுள்வானாயினும், எதிர்த்துப் பொருதலின்றியே, வஞ்சனையால் சீதையை வௌவுதற்கு முயல்வதன் காரணம் என்னெனும் வினாவிற்கு அவனுரைக்கும் பொய்விடைகள் வேறு வேறு.

இராமனைப் புகழ்வதில் தன் வீரமன்றியும் மானமும் பழுதுற்றதென வெகுண்டனனாய் மீண்டும்,

நிகழ்ந்ததை நினைத்திலையெ னெஞ்சினிலை யஞ்சா
திகழ்ந்தனை யெனக்கிளைய நங்கைமுக மெங்கு
மகழ்ந்தனைய தொப்புற வமைத்தவரை யையா
புகழ்ந்தனை தனிப்பிழைபொறுத்தனெனி தென்றான்.

[நடந்ததை நினைத்து நீ பேசவில்லை; என் மனம் இருக்கின்ற நிலைகண்டு அஞ்சாமல் நீ இகழ்ந்தாய். என் தங்கை சூர்ப்பணகையினுடைய முகம் முழுவதும் தோண்டியது போலச் செய்தவர்களைப் புகழ்ந்து பேசினாய். எனினும், பெரியதேனும் இந்த ஒரு குற்றத்தைப் பொறுத்தேன்—என்று கூறினான்.]

தன்வீரத்தைப் பற்றிப் பகர்ந்தது போன்றே மானத்தைக் குறித்துக் கூறும் இதுவும் பொய்யே. முன்னரே இவன், "தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான் உரனையும் மறந்தான், உற்ற பழியையும் மறந்தான், ஆதலால் மாரீசனை மடக்குதற்குப் பகர்ந்த மொழிகளே யொழிய இவை, பழியினைத் துடைக்கப் பேசியவைகளல்ல. சீதையைத் தனக்குத் தருதற்கோர் காரணமாய் அறுந்து வீழ்ந்த அத்தங்கையின் மூக்கிற்கு இப்பொழுதிவன் நன்றியுடையவனா யிருத்தலே தக்கதாம்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

4-ம் பத்து 10-ம் தசகம்

[334-வது பக்கத் தொடர்ச்சி]

8-ம் பாசுரம்.

புக்கடி மையினுற் றன்னைக் கண்ட
மார்க்கண் டேயனவனை
நக்கபி ரானன் றுய்யக் கொண்டது
நாரா யணனருளே
கொக்க லர்தடந் தாழை வேலித்
திருக்குரு கூரதனுண்
மிக்கவா திப்பிரா னிற்க மற்றெத்
தெய்வம் விளம்புதிரே.

பொழிப்புரை:—திகம்பரனை உருத்திரனை யாச்ரயித்தன்றோமார்க்கண்டேயன் தன்மனோரதத்தின்படி சிரஞ்சீவியாயிருப்பதைப்பெற்றது? அவன் மிருத்தியுபாதையினின்றும் விடுவிக்கப்பட்டது? நாராயணன் திருவருளாலும் பிரஸாதத்தாலும் இது நிகழ்ந்தது என்பது புராண சித்தம். இவ்விஷயத்தில் ஸ்ரீருத்திரன் புருஷாகாரம் மாத்திரமே. ஆதலால் இப்படிச் சர்வேசுரனை நாராயணனை ஒழிய மற்றஎந்தத் தெய்வத்தைக் கொண்டாடுகின்றீர்கள், ஜனங்களே!

குறிப்பு:—விளம்பு - சொல் - அதாவது ஈசுவரனென்று சொல்வதுமாத்திரமல்லாமல் பூஜை வழிபாடுகளையுங்கூடக் குறிக்கின்றது. மார்க்கண்டேயன் உபாக்கியானத்தைஎடுத்தது-மோக்ஷம்கொடுக்கிறவர் நாராயணதேவனாயிருக்கலாம்; இதரப் பிரயோஜனங்களுக்கு மற்ற இஷ்டதேவதையை யாசிக்கலாகாதோ என்ற சங்கைக்கு இப்பாசுரம் விடை கூறுவதாகக் கொள்ளவேண்டும்.

---

9-ம் பாசுரம்

விளம்பு மாறு சமய முமவை
யாகியும் மற்றுந்தன்பா
லளந்து காண்டற் கரிய னாகிய
வாதிப் பிரானமரும்
வளங்கொள் பண்ணை சூழ்ந்தழ காய
திருக்குரு கூரதனை
உளங்கொள் ஞானத்து வைம்மி னும்மை
யுய்யக்கொண்டு போகுறிலே.

உரை:—விளம்பும் ஆறுசமயமும்-பிரசித்திபெற்ற ஷண்மதங்களும், அவையாகி-பகவானால்சிருஷ்டிக்கப்பட்டதே. சென்ற 6-ம் பாசுரத்தில் இதன் தர்ம நியதியைப்பற்றி ஆழ்வார் அருளிச் செய்ததை அங்குக் கண்டு கொள்க. மற்றும் - தவிர, தன்பால் அளந்து காண்டற்கு அரிய-அவனது சுவரூப நற்குண ஐசுவரியங்களை அளவிடக் கூடாதபடியாயிருக்கின்ற, ஆதிப்பிரான் வளங்கொண்ட திருக்குருகூரதனை, உம்மை உய்யக்கொண்டு - நீங்கள் நல்வழி நன்னெறி அடைந்து தேறவேண்டுமானால், - உளங்கொள் ஞானத்து- உங்கள் மனதில் ஆழ்ந்த பக்தியுக்தராய், வைமின்- ஸ்திரமாக வையுங்கோள். "அல்பமதங்களைச் சாராமலும், அல்பதேவதைகளைப் பூஜியாமலும்நாராயணனை அடையுங்கோள்" என்பது தாத்பரியம்.

---

10-ம் பாசுரம்.

உறுவ தாவ தெத்தேவு மெவ்வுல
கங்களும் மற்றுந்தன்பான்
மறுவின் மூர்த்தி யோடொத் தித்தனையு
நின்றவண் ணம்நிற்கவே
செறுவிற் செந்நெற் கரும்போ டோங்கு
திருக்குரு கூரதனுட்
குறிய மாணுரு வாகிய நீள்குடக்
கூத்தனுக் காட்செய்வதே.

உரை:—எத்தேவும் - எல்லாத் தெய்வங்களும், மற்றும் - கூறாத மற்றவைகளும், தன் பால் - தன்னிடத்திலே அதவாது தன் சுவரூபத்திலே, மூர்த்தியோடு - திவ்விய மங்கள விக்கிரஹம் பகவானுக்கு எப்படி அஸாதாரணமோ அப்படிப்போல், ஒத்து - அவனுக்குஅசாதாரண உரித்தாய் அவனுஞ்ஞைக்கு, மறுவில் - குறைவில்லாமல் உட்பட்டு, இத்தனையும் நின்றவண்ணம் நிற்கவே - குறியழியாமல் பண்டிருப்பதுபோல் இருக்கையில், செறுவில் - நல் நிலத்திலே, செந்நெல் கரும்போடு ஓங்கும் திருக்குருகூரதனுள், குறிய மாண் உருவாகி - வாமனாவதாரம் எடுத்து, நீள்குடக்கூத்தனுக்கு-பசஸால் எல்லாக் காலத்திலும் குடக்கூத்தை உலகத்தார் மெச்சிய ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு, ஆள் செய்வதே - பரம பதத்திலும் இங்கு இருக்கையிலும் கைங்கிரியஞ்செய்வதே, உறுவது ஆவது-உசிதமான காரியம்.

கருத்து:—எல்லாத் தெய்வங்களும் எல்லா உலகங்களும் எல்லாச் சிருஷ்டிகளும் பகவானது சுவயரூபம்போல் அவனுக்கே உரித்தென்ற விசுவாஸத்துடன் அவனுக்கு ஆள்செய்வதுஉத்தமமானகாரியம்.

---

11-ம் பாசுரம்.

ஆட்செய் தாதிப் பிரானைச் சேர்ந்தவன்
வண்குரு கூர்நகரா
னாட்க மழ்மகிழ் மாலை மார்பினன்
மாறன் சடகோபன்
வேட்கையாற் சொன்ன பாட லாயிரத்
துளிப்பத் தும்வல்லார்
மீட்சி யின்றி வைகுந்த மாநகர்
மற்றது கையதுவே.

பதக்குறிப்பு:— வேட்கையால்-பகவானிடத்துள்ள பக்தியால், நாள்கமழ் - புதிய வாசனை வீசும், மீட்சியின்றி - ஜந்மமாகிற புனராவர்த்தி இல்லாமல், வல்லார்க்கு இப்பத்து வைகுந்தமாநகர் கொடுக்கும் ஆனந்தத்தை விளைவிக்கும்; மற்றது கையதுவே - இதில் அபேக்ஷை இன்றி வைகுண்டமே மீட்சியின்றி வேண்டுமென்றால், மற்று, அது - அந்த வைகுண்டமே, கையதுவே-கையிலிருப்பது போல - அதாவது கரஸ்தம் என்று தாத்பரியம்.

விசேஷக் குறிப்பு:—மேல் உரையிட்டு முடிந்த நான்கு பத்துக்களாலும் என்ன என்ன விஷயங்கள் சொல்லிமுடிவுபெற்றவென்று விசாரித்துப் பிறகு 5-ம் பத்து என்ன என்ன பகவத் குணங்களை எடுத்துக் கூறப்போகிறதென்று எடுத்துக்காட்டப் புகலாம்.

---



ஸர்வ கல்லியாண குணங்களும்நிறைந்து பொருந்திய ஸ்ரீபதியே ஸேவிக்க யோக்கியனென்றும் அவனை அடைவதற்கு அவனே உபாயம், அதாவது அவனே சாதன பூதனென்றும், எவனை (மனிதனையோ தேவதையோ) பகவான் வரித்துக் கூவிக்கொள்கின்றானோ அவனே பகவானை யடையப் பிராப்தனென்றும் திருவாய்மொழியால் ஆழ்வார் ஸ்தாபிக்கிறார். இதுவே உபநிஷத்துக்களின் தாத்பரியமும் ஆம். வியாஸபகவான் பிரம்மஸூத்திரத்தில் அறுதியிட்டபடி ஆழ்வாரும் முதல் பத்தில் பகவான் ஸேவியனாக உபாயமாகிற ஜகத் காரணனாகிய பரம்பொருளென்றும், இரண்டாம் பத்தில் இவ்வண்ணம் ஸேவை செய்வதால் அவனே அடைப்புப் பொருளாகிய அதிமனோஹரமான இஷ்டப் பிராப்பியனென்றும், மூன்றாம் பத்தில் இப்படி உபாயமாயும் உபேயமாயுமுள்ளவன் திவ்வியமங்கள ஆநந்தரூபமான விக்கரக வடிவுடைய ரூபனென்றும் சொல்லி முடித்தார். சென்ற நாலாம் பத்தில், பகவானது உபேயத்துவத்தை ஸ்தாபித்து ஸர்வயோக்கியனென்று இரண்டாம் பத்தில் சொன்ன முக்கிய அபிப்பிராயத்தை ஸ்திரப்படுத்திப் பேசுகிறார். இந்த நாலாம்பத்தில் முதல் தசகத்தில் நித்திய ஐசுவரியமுள்ளவன் பகவானென்றும் மேல்படி ஐசுவரியம் முதலான புருஷார்த்தங்கள் அஸ்திரமென்றும் உபதேசிக்கையால் பகவானே ஸ்திர புருஷார்த்தமென்று கற்பிக்கிறார். 2-ம் தசகத்தில் திருவாழி திருச்சங்கு முதலான திவ்வி பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்ட பகவான் நிர்வதிய தேஜோ விசிஷ்டனென்றும் நிர்வதிகக் கல்லியாண குண விசிஷ்டனென்றும் நிர்வதிகச் சுவரூபனென்றும் வெகு ரமணீயமான போக்கியனென்றும் அருளிச் செய்தார். 3-ம் தசகத்தில் ஆச்ரிதர்களோடு பகவான் ஒரு நீராக கலக்கின்றவனென்றும் அவர்களின் ஆத்ம ஆத்மீயங்களை அவனது ஸௌலப்பிய குணத்தாலே தனதாகவே ஏற்றுச் சந்தோஷிக்கின்றானென்றும் உரைத்தார். 4-ம் தசகத்தில் பக்தர்கள் அவனைவிட்டு அகன்றால் அந்நியோந்நியமாயுள்ள சினேகத்தாலே அவர்களுக்கு விரஹதெசையில் துயர்பாடுகளை விளைவிக்கின்றானென்றும் அருளிச்செய்தார். 5ம் தசகத்தில் எம்பெருமான் ஆச்ரிதருக்குத் தன்னைக்காட்டிக்கொடுத்துத் தன் ஸ்துதி கீர்த்தனைகளில் நினைவுண்டாக்கி அவர்களைக் கிருதார்த்தனாக்கினானென்கிறார். அடுத்த 6-ம் தசகத்தில் விரஹாவஸ்தையில் அவனே பக்தர்களின் நோய்க்கு மருந்தென்றும், அவனது திருத்துழாயும் தன் அடியார் பாததூளியுமே நன்னோயைத் தீர்க்குமென்றும் உபதேசித்தருளினார். 7-ம் தசகத்தில், பிரளயத்திலும்உலகங்களை எல்லாம்இரக்ஷிப்பவனென்றும் நிரவதிக தேஜஸு உடையவனென்றும் சுவாநுபவமாகிய திவ்விய ஆநந்தத்தைக் கொடுப்பவனென்றும் எல்லாச் சரீரங்களிலும் உட்பிரவேசித்து நடத்துபவனென்றும் எல்லாவற்றிற்கும் நிருபாதிக சுகிருதன் என்றும் அநேக கல்லியாண குணங்களால் பிரகாசிக்கின்ற அவன் பக்தியோகத்தால் அடையயோக்கியனென்றும், தனக்குத் தக்க சிற்சில ஞான பக்தியோகங்களால் ஸாதிக்க வல்லாதவனாயிருக்கிறானென்றும் இன்னாதாராகின்றார். அடுத்த தசகத்தில், பகவானையேகவர்ந்துகொண்டு காலம்போக்காத நாள்கள் ஆச்ரிதருக்குப் பிரயோஜனமில்லை என்றும் அருளிச் செய்கின்றார். ஒன்பதாம்தசகத்தில் பக்தர்களுக்குப் பகவான் நிரதிசய புருஷார்த்த ரூபனாயிருப்பானென்றும் பக்தர்கள் மனதுக்கு இஷ்ட பலப் பிரதனென்றும் உபதேசித்தார். கடைசி தசகத்தில் சர்வ தேவதா ஸார்வபௌமனென்றும் ஆகையால் இந் நாலாம்பத்தில் எம்பெருமான் தானே பக்தர்களுக்கு அநந்த ஸ்திரரூப பலனென்று தலைக்கட்டுகிறார். மேல் ஐந்தாம் பத்தில், முதல் பத்தில் ஆரம்பமான உபாயத்துவத்தையே தொடர்ந்து ஸேவியத்துவத்தைத் திடப்படுத்துகிறார். மேல் பத்துக்களும் பகவானது ஸேவியத்துவத்தையே பேசுகின்றன.

---

# யாப்பிலக்கணம்

[328-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்—கலிப்பா

மூன்னிதழில் தரவு கொச்சகக் கலிப்பா, தரவிணைக் கொச்சகக் கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாஎன்பவற்றைப்பற்றிக் கற்றோம்; இவ்விதழில் நிறுத்த முறையே பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்பவற்றைப் பற்றிக் கற்போம்:

7. **பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா:**—ஒரு தரவும், மூன்றின் மிக்க பல தாழிசையும், தனிச்சொல்லும், சுரிதகமும் முறையே கொண்டு முடிவது பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா எனப்படும். (பல் + தாழிசை = பஃறாழிசை)

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா

(தரவு)

தண்மதியோர்முகத்தாளைத்தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடைநிறையு முடன்றளர முன்னாட்கண்
கண்மதியொப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ

(தாழிசை)

இளநலம் இவள்வாட இரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பல் தாழ்குழல் தளர்வாளோ?
தகைநலம் இவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநலம் இவள்வாடி வருந்தியில் இருப்பாளோ?
அணிநலம் இவள்வாட அரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசோடு மடிவாளோ?
நாம்பிரியேம் இனியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோம் எனவுரைத்த உயர்மொழியும் பழுதாமோ?
குன்றளித்த திரள்தோளாய் கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்த அருண்மொழியால்அருளுவதும்அருளாமோ
சில்பகலும் ஊடியக்கால் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலும் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ?

(தனிச்சொல்)

எனவாங்கு,

(சுரிதகம்)

அரும்பெறல் இவளினும் தரும்பொருள் அதனினும்
பெரும்பெறல் அரியன வெறுக்கையும் அற்றே.

விழுமிய தறிமதி யறிவொங்
கெழுமிய காதலில் தரும்பொருள் சிறிதே."

8. மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா:—இரண்டு தரவும், ஆறு தாழிசையும், அராகமும், மீண்டும் ஆறு தாழிசையும், அம்போதரங்கமும், தனிச் சொல்லும், சுரிதகமும் கொண்டு முடிவது மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா எனப்படும்.

குறிப்பு:—இது மேற்கூறிய உறுப்பிற் சிற்சில பிறழ்ந்தும், உறழ்ந்தும், குறைந்தும், மிக்கும் மயங்கி வருதலின் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனப் பட்டது. இதனை ஒருபோகு எனும் பெயரால் வழங்குதலும் உண்டு. இது கலம்பகம் என்னும் பிரபந்தத்திற்கு முதல் உறுப்பாக அமையும் என அறிக.

மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா

(தரவு)

மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூரும் ஏமஞ்சார் துறைவகேள் :
மலைபென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கடலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி இறக்கலா
தெழுமுந்நீர் பரந்தோங்கும் ஏமஞ்சார் துறைவகேள்:

(தாழிசை)

கோடிபுரையு நுழைநுசுப்பில்
குழைக்கமர்ந்த திருமுகத்தோள்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டும்
துறவலனே என்றியால்.

கண்கவரு மணிப்பைம்பூண்
கயில்கவைய சிறுபுறத்தோள்
தெண்பனிநீர் உகக்கண்டும்
தெரியலனே என்றியால்.

நீர்பூத்த நிறையிதழ்க்கண்
நின்றெருசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும்
பிரியலனே என்றியால்.

கனைவரல்யாற் றிருகரைபோல்
கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் நிலைகண்டும்
நீங்கலனே என்றியால்.

வீழ்சுடரின் நெய்யேபோல்
விழுமநோய் பொறுக்கலாத்
தாழுமென் நிலைகண்டும்
தாங்கலனே என்றியால்.

கலங்கவிழ்ந்த நாய்கன்போல்
களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் நிலைகண்டும்
போகலனே என்றியால்.

(தனிச்சொல்)

அதனால்,

(அராகம்)

அடும்பயில் இறும்பின் நெடும்பணை மிசைதொறும்
கொடும்புற மடலிடை ஒடுங்கின குருகு.
சேறிதரு செருவிடை ஏறிதொழில் இளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்.
அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்.
அலங்கொளிர் அவிர்சுடர் இலங்கொளிமலர்தொறும்
கலந்தெறி காலொடும் புலம்பின பொழில்.

(தாழிசை)

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ?
ஒல்லாது கழலுமென் ஒளிவளையுந் தவிர்ப்பாய்மன்
நில்லாது பெருகுமென் நெஞ்சமு நிறுப்பாயோ?
தாங்காது கழலுமென் தகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் நெஞ்சமு நிறுப்பாயோ?
மறவாத அன்பினேன் மனநிற்கு மாறுரையாய்;
துறவாத தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்.
காதலார் மார்பன்றிக் காமக்கு மருந்துரையாய்
எதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்.
இணைபிரிந்தார் மார்பன்றி இன்பக்கு மருந்துரையாய்;
துணைபிரிந்த தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்.

(தனிச்சொல்)

எனவாங்கு,

(அம்போதரங்கம்)

| | |
|---|---|
| பகைபோன் றதுதுறை. | தகையிழந் ததுதோள். |
| பரிவா யினகுறி. | தலைசிறந் ததுதுயர். |
| நகையிழந் ததுமுகம். | புகைபரந் ததுமெய்.[யி |
| நனிநா ணிற்றுளம். | போறையாயிற் றென் |

(தனிச்சொல்)

அதனால்,

(சுரிதகம்)

இனையது நினையால் அனையது பொழுதால்
இனையல் வாழி தோழி துனைவரல்
பனியொடு கழிக உண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே."


# ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

**செந்தமிழ்க்காதை.**

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0




# வாலி வதை

[327-வது பக்கத் தொடர்ச்சி]

வாலி வதார்ஹறு இல்லையா என்ற கக்ஷியை முதலில் எடுத்து ஆராய்வோம். வாலியைக் கேவலம் வானரம் என்று சொல்ல ஒருவரும் முன்னுக்கு வரமாட்டார்கள். அவன் இந்திரன் குமாரன் என்று மதித்தும் கூறப்பட்டிருக்கிறது. இவன் ஏனைய ஜாதி வானரங்களைப்போலாது பேசவும் வல்லன், இராஜ்யத்தை ஆளவும் வல்லன். தருமா தரும ஞானத்தில் கைதேர்ந்தவன். நல்ல விவேகி. கொடிய தபசுகள் பற்பல செய்து அசாதாரணமான உயர்ந்த வரங்கள் படைத்தவன். "பஞ்சின் மெல்லடியாள் பாகன் பாதுக மல்லாது யாதும் அஞ்சலித்தறியா" பரமேகாந்தி. கல்வி கேள்விகளால் நிறைந்த ஞானத்துடன் பெருமாளுடன் வாதாடவல்ல சொல்திறம் படைத்தவன். ஆகவே "நான் படைத்த சரீரம்பற்றி வானர ஜாதிப் பிரயுக்தமான செய்கைகளைக் கைக்கொண்டேன்" என்று இவன் கூறின கக்ஷி ஒருவிதத்திலும் பொருந்தாது. தன் தம்பியின் ஸ்திரீயைப் பரிகிரகம் செய்ததற்குக் காரணம் கேட்டவிடத்து, தான் ஓர் விலங்கே யென்று பெருமாளுடன் வாதாடின சமயம் ஸர்வ சாஸ்திர பாரங்கதையுடனும் "நின்ற நன்னெறி நீயறியாநெறி, யொன்றுமின்மை உன் வாய்மை யுணர்த்துமால்" என்று பெருமாளே போற்றும்படியாய் இவன் தோன்றினன் என்பதையும் கவனிப்போமாயின் வாலி இக் குற்றத்தினின்றும் தப்பித்துக் கொள்வதற்குக் காட்டிய காரணங்களும் வழக்குக்களுமன்றே Estoppel என்னும் தோஷத்திற்கு அவனை உள்ளாக்குகின்றன. கம்பரன்றி ஏனைய கவிகளால் எடுத்துக் காட்டுதல் சாத்தியமில்லாத தர்ம சாஸ்திரங்கள் கொண்டு பாவியின் கக்ஷிகளைப் பெருமாளும் அடக்குகிறார் என்று ஏற்படுகிறது.

தம்பியின் ஸ்திரீயை இவன் பெண்டழித்தது நிற்க வேறு மூன்று குற்றங்களை வாலியின்மீது பெருமாள் பொருத்தத்துடன் ஏற்படுத்திய விவரம் முன்னரே காட்டியுள்ளேன். நிரபராதியான சுக்ரீவனை விபரந் தெரிந்தும் இவன் கொல்லலுற்றது, அஞ்சலியஸ்தனாய் நின்று தன் அபராதத்தைப் பொறுத்துக் காப்பாற்றும்படி சரணமடைந்த தம்பியை ஆதரியாது யமலோக மனுப்புவதாகத் துணிந்தது முதலியன இவைகளுக்கு வாலி பதில் கூறவேயில்லை என்று முன்னரே விளக்கியுள்ளேன். இக் குற்றங்களையும் தங்கள் வானர ஜாதிப் பிரயுக்தமாய் ஏற்பட்ட ஆசாரணைகள் என்று சொல்ல வாலியும் துணியவில்லை. இக்குற்றங்கள் ஒவ்வொன்றும் மரணதண்டனைக் குரியது என்பர். ஏனைய அபராதங்களைப் பொறுத்தல் இயலுமேனும் சரணாகத சம்ரக்ஷணத்தில் தவறினவனைக் கொல்லாது நிற்றல் பெருமாளுக்கு அஸாத்தியமாம். இவைகள் கொண்டும் வாலி வதார்ஹன் என்று கொள்ளத் தட்டில்லை.

ஆனால் முன் இவனைப்பற்றி

"பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேசலாமோ"

என்று பெருமாளே கூறியுள்ளாரே என்பர். இது வாலியைப்பற்றிய பாசுரமல்லவே. சுக்ரீவனைப்பற்றியதன்றோ? ஜேஷ்ட பிராதாவான பெருமாளை,

"நற்றாதையும்நீ தனிநா யகனீ வயிற்றிற்
பெற்றாயு நீயே பிறரில்லை"

என்றதைச் சத்தியஸங்கல்பமாகக் கொண்ட இளைய பெருமாள், தன் தமையனுக்குக் கூற்றுவனைக் கொணர்ந்து குதூகலித்து நின்ற சுக்ரீவன் செய்கையில் மனம் பொறாதவனாகி அவனை இழித்துக்கூறி இவன் நம்பிக்கைக் குரியனல்லன் என்று சித்தாந்தஞ் செய்யும் அவனுக்கு இராமன் சமாதானம் கூறின விபரம் இது. இராஜ்ய தந்திரத்தில் வல்லவனான பெருமாள் தன்னுடன் இளைய பெருமாளையும் இணக்கிக் கொள்வதற்காக Diplomatic ஆக எடுத்துரைத்த பாசுரம். உயர்தரமானிடப் பிறவியில் ஒரே தாய் வயிற்றிற் றோன்றும் சகோதரர்களுக்குள் மனமொத்திருப்பதைக் காணும் ஆசை அவ்விதமிருந்தால் "நப்பிராதாபரதோபம: என்று ரிஷியும் கொண்டாடும்படியாய்ப் "பரதன் பெரிதுத்தம னுதலுண்டோ" என்று உலகவியல்பைக் கூறி, இது இவ்வாறிருக்கவும் வானர இனத்தில் தோன்றிய இச் சுக்ரீவனிடம், "Ideal" சகோதரர்களுக்குள் நீ எதிர்பார்க்கும் மனப்பாங்கு அமைவது எவ்விதம் என்று காலமும் இடமும் அறிந்து பெருமாள் கூறினாரென்க. இதைத்தான் விபீஷணனடைக்கலப் படலத்திலே,

"தகைப்புலத்தோர் தந்தையர்கள் தம்பியர்கள்
தமையரிவர் தாமே யன்றோ
மிகைப்புலத்து விளைகின்ற தொருபொருளைக்
காதலிக்கின் விளிஞ்ச ராவார்"

என்று ஆஞ்சநேயன் கூற்றாக அமைத்துள்ளார் நம் கவியும்.

"த்யக்துவா புத்ராம்ச்ச தாராம்ச்ச
ராகவம் சரணம்கத:"

என்றும்,

"பரித்தியக்தா மயாலங்கா மித்ராணிச தானிச"

என்றும் ஸ்ரீ வால்மீகத்திலும்,

"எல்லையில் பெருங்குணத் திராமன் றாளிணைப்
புல்லுதும் புல்லியிப் பிறவி போக்குதும்"

என்று கம்பநாடகத்திலும் அறுதியிட்டு ஏகதேசமாய்ப் பாரமார்த்திகவிஷயத்திலேபுத்தியைப்போகப் பண்ணிப் பிரயோஜனாந்தர பரனன்றிக்கே அனன்ய பிரயோஜன விபீஷணாழ்வான் சரணம் புகுந்தவிபரம் ஸ்ரீராகவன் திருவுள்ளத்தில்நன்றாய்ப்பதிந்திருக்கவும், லௌகிக வியவஹாரங்களிலே மண்டி, மண்ணாசை பெண்ணாசை படைத்து நின்ற சுக்ரீவாதிகளுக்கு இவ்வுயரிய விபரம் மனசில் பட்டுத் தெளிவுபெறச் செய்யுமியல்பினதல்ல என்று துணிந்து, அவர்கள் புத்திக்கு அந்தச் சமயம் பொருத்தமாயிருப்பதும் இணக்கி வைப்பதுமான விரகிது என்று துணிந்து "ராஜ்யகாங்க்ஷீச ராக்ஷஸ:" என்று ஸ்ரீவால்மீகி நாதனும் "காதல் அருத்தியு மரசின் மேற்றே" என்று கம்பநாடரும் பிரபுவின் வாயிலேபோட்டுச் சொன்னவிஷயம்இங்கே ஞாபகத்திற்கு வரலாம். இதுவும் High Class Diplomacyல்சேர்ந்ததுஎன்றேகொள்ளல்வேண்டும். இவ்விஷயத்தை ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகனும் அபயப் பிரதானஸாரத்திலே நன்றாகவிளக்கிக்காட்டியுள்ளார்.

"ராஜ்ய காண்க்ஷீச ராக்ஷஸ:" என்று பெருமாள் அருளிச் செய்த வார்த்தையும் ராமபக்தியாலே கலங்கின மகாராஜருடைய கிளர்த்தியை யடக்குகைக் கீடாக நீதி சாஸ்திரங்களிலே சொல்லும் ராஜ விருத்தாந்தக் கட்டளையைக் காட்டினபடியா மத்தனை." பின்னர் விபீஷணாழ்வானுக்கும் பெருமாள் இலங்கையை முடிசூட்டியதும் அவன் கொண்ட கருத்திற் கிணங்கியன்று என்றும், அடைக்கலப் பொருளாய் அவனை அங்கீகரித்ததனடியாக அப்புண்யபுருஷனுக்கு ஆநுஷங்கிகமாக (Incidently) பெருமாள் உகந்தருளின ஐசுவரிய விசேஷம் என்றும் பெரியோர் கூறுநிற்பர். "நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் தன்னையே தான் வேண்டும் செல்வம்" என்பது எம்பெருமான் சங்கல்பமாதலின். எனவே சுக்ரீவனைப்பற்றி (Diplomatic) ஆகப்பிறந்த இப்பாசுரங்கொண்டு ஸ்ரீ இராகவன் வாலியை விலங்காக மதித்தனன் என்று கொள்ளுதல் பொருத்தமாகாது. ஆகவே இராமபிரான் வாலியை ஒரு சமயம் விலங்காகக் கொண்டு மறைந்து நின்று பாணம் ஏவினன், மற்றொரு சமயம் வாலியை உயர்தர மக்கட் பிறவியிற் பிறந்தானாகமதித்து வாதாடினன் என்றலொன்றுக்கொன்று விருத்தமாயிருப்பதுபோலக் கண்டு ஆக்ஷேபித்தல் தகாதென்று சொல்லி முடிக்கலாம். அவனை விலங்காக இராமன் மதிக்கவில்லை என்று ஏற்படவே அவனை மகா பண்டிதனாக வைத்துப் பெருமாள் சம்ஹரித்தருளினர் என்றும் அவ்விதம் கொன்றதற்குக் காட்டிய காரணங்கள் மிகவும் பொருத்தத்துடன் நிற்பதும் வியக்தமாய் ஏற்படுகின்றது.

"அவ்வுரை யமையக்கேட்ட" என்ற பாடலிலிருந்து வாலி பெருமாள் தன்னை விலங்காக மதித்தான் என்று கொண்டான் என்பர். அப்பாடல் "இடைச்செருகல்" என்பது எனது கக்ஷி. அது அவ்விதமில்லையென்றாலும் அப்பாடலில் வாலியை ஸ்ரீராமன் விலங்காக மதித்தான் என்பதற்கு யாதொரு பதப்பிரயோகமும் காணேம். "வெவ்விய புளிஞரென்ன" என்ற சப்தத்திலிருந்து "வாலியை மிருகம்" என்று பிரபு துணிந்தானென்று ஊகிக்கக்கிடக்கிறதெனின், இது வாலி கொண்ட கக்ஷியாமேயன்றிப் பெருமாள் பக்ஷமென்பதற்கு ஆதாரம் காணேம். அந்தரங்க நியாயத்தாலே பெருமாள் உட்கருத்தை வாலியின் அபிப்பிராயம் கொண்டு தெளிதல் சால்புடைத்தன்று. "வாலி ராம" ஸம்வாதத்திலிருந்து பெருமாள் அவ்வானரவீரனை விலங்காக மதித்தான் என்று கொள்வதற்கு ஒருவிடத்திலும் வழியில்லை. இது ஒரு புறமிருக்க, சாமான்னிய பார்வையிலும் பரஸ்பரம் விருத்தமாய்த் தோன்றும் கக்ஷிகளைக் கம்பர் எடுத்தாளும் இயல்பினரல்லர். இதையும், இயம்பவல்லனாகிய கதாநாயகன் வாயிலே போட்டு அப்பெருமானைச் சிறியனாய்த் தோற்றுமாறு செய்யக் கம்பர் ஒருவிதத்திலும் உடன்படார்.

இனி, "வாலிராம ஸம்வாதத்தில்" பெருமானைப் பற்றிய கம்பரது உட்கருத்து யாதெனச் சிறிது ஆராய்ச்சி செய்வாம். இராமபாணத்தால் அடிபட்டுக் கீழே விழுந்த வாலியும் பெருமானை ஏசுவதற்கு முன் "இதுவுந்தானோ ரோங்கறமோ" என்று உன்னினன் என்பர். பெருமாள் திருநாமம் தீட்டப்பெற்ற பாணத்தைப் பார்த்த பிறகு ஏற்பட்ட பாசுரமிது. "கல்வி கேள்விகளால் நிறைந்த மகா பண்டிதனை எனக்கும் தெரியாததாய்ப் பரம நுட்பமான சூக்ஷ்ம தருமமிதுவோ" என்று இங்கே வாலியால் சங்கிக்கக் கிடந்தது. பின்னர், "அறத்திற னழியச்செய்யான் புவியிடை யண்ணல்" என்று துணிவதற்குக் காரணமாயிற்று என்று மிகவும் அழகாய்ப் பொருள் படும்படி பெறவைத்துள்ளார் கவிஸார்வபௌமனும். தான் செய்த காரியத்தைச் சரியென்று காட்டுவதான நோக்கத்துடன் வாலிக்குமுன் பெருமாள் ஸேவை ஸாதித்த உபக்ரமத்திலே,

மறைதிறம்பாதவாய்மை மன்னர்க்கு முன்னம் [சொல்லும்
துறைதிறம்பாமற் காக்கத் தோன்றினன் வந்து தோ [ன்ற"

என்றும், வாலிராம சம்வாதத்தின் உபசம்ஹாரத்திலே,

இனைய தாதலி னெக்குலத்தி யாவர்க்கும்
வினையி னல்வரு மேன்மையுங் கீழ்மையும்
அனைய தன்மை யறிந்து மழித்தனை
மனையின் மாட்சி யென்றான் மநுநீதியான் "

என்றும் ஸ்வாபிப்பிராய விசேஷணங்களையே நம் புலவர் பெருமான் பெருமானுக்கு அடைமொழியாக்கி உகந்து நிற்கவும் "வாலி வாதத்தில், இராமனே தோற்றனனென்பதும், அவ்வாறிவன் தோற்கவேண்டுமென்பதே கம்பரது உட்கருத்தென்பதும் விஞ்சிய இராமபக்தியுடனிருக்கும் நம் கவிச்சக்கரவர்த்தியாருக்கு ஸஹிருதயமா யிராதென்று துணியும்படியிருக்கின்றது. அத்தோல்வியினாலேயே இராமனது தனிப்பெரு மேன்மையை நிலைநாட்டக் கருதிக்காரிய சித்திபெற்றார் கம்பர் என்பதும் அதிவாதமேஎன்று ஐயுறுவேன்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

**டானிக்குகள்:**

| | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| **குழந்தைகளுக்கு** | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |



**தைலங்கள்:**

| | | |
|---|---|---|
| சந்தனாதி | 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| அமிர்தாமலக | " | 0-12-0 |
| பிருங்காமலக | " | 0-12-0 |
| **ஸ்திரீகளுக்கு** | | |
| ஸுமங்க டானிக் | | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.எ.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றுணவுக்கு எண்ணெய் காஸ்ட்ரோலக்ஸ்
ஜ்வரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]





## கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயல வேண்டா. விளம்பிநல் வெட்கக்கேடு. கல்லாதம்பர்களை நல்லவர்கள் 3. நாணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள்ள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்னம் ஐயர், B. A) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ப்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நன்னாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்னம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவவாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அநுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முக்தி முதலியவைகளின் உண்மை

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

**களவியற் காரிகை:**—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்டு செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

எமது புதிய பிரசுரங்கள்

**சோவியத் ருஷியா.**

இது பண்டிதர் ஜ்வஹரிலால் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. ஏழை, பணக்காரன், ஆள்பவன், ஆளப்படுபவன், ஆண், பெண் என்னும் ஏற்றந்தாழ் வில்லாதபடி, குடிவாழ்க்கை ருஷியாவில் அமைக்கப்பெற்றுளதெனக் கூறப்படும் தற்கால ருஷியசரித்திரமாகும் இது. விலை ரூ 1-4-0. தபால் செலவு வேறு.

**இராட்டூர் வீரன் துர்க்காதாஸ்.**

வங்காளக் கவி பாபு துவிஜேந்திரலால் எழுதிய நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இரஜபுத்திரர் வீரத்தையும், அவர்களது இராஜ விசுவாசத்தையும் இந் நாடகம் புலனுக்குகின்றது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

**சுப்பிரமணிய பாரதியார்.**

தமிழ் நாட்டின் தேசியக் கவி என்று கொண்டாடப் பெறும் ஸ்ரீமான் பாரதியாரின் நூல் ஆராய்ச்சியாகும் இது. விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

பாரதி புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



திரு அருட்பா

பி. எ., எம். எல்., அட்வொகேட்,
**ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு**
ஒன்றே
**சுவாமிகள் கை எழுத்தைக்கொண்டு அச்சிட்டது!**

ஆகையால், பிழை முதலிய விபரீதங்கள் இல்லாததும் நூதன விஷயங்கள் எல்லாம் கொண்டதும் இப்பதிப்பே!!

ஏற்ற பெற்றி பாகுபாடு செய்யப்பட்டு, அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு விளங்கும் இப் பதிப்பின் பகுதிகள் அடக்க விலையில் கிடைக்கும்!!!

6-வது தனிப் பாசுரப் பகுதி
(பல மத ஸ்தோத்திரங்கள்-தபால் செலவோடு 6 அணா அனுப்புதல் வேண்டும்.)



**ANCIENT JAFFNA**

**Mudaliar C. Rasanayagam** C. C. S.

An anthentic history of Jaffna based on archeological, Epigraphic and Linguistic researches.

**Rs. 5 8 0 Postage extra.**

KALANILAYAM
**Vellala Street, Purasawalkam, Madras.**



சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

**— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —**

தமிழகராதி ஆதார நூற்றொகுதி
**நாம தீப நிகண்டு.**

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

**அரும்பொருள் விளக்க நிகண்டு.**

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

**கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.**

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

**திருக்குறள்**

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா **0-12-0**

**களவியற் காரிகை.**

ஒரு சிறந்த அகப்பொருளிலக்கணநூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

**நூற்பொருட் குறிப்பு.**

1. இறையனர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட்குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

**இராஜசுந்தரம்.**

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

**தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா**

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணா **0-6-0**

**கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.**




# வர்த்தமானம்

**ருஷிய பிரிட்டிஷ் ஒப்பந்தம்:**—ருஷிய சோவியத் அரசாங்கத்தார் சில ஆங்கிலேயர்களைக் கைதுசெய்தபடியினால், பிரிட்டிஷார் ருஷிய சாமான்களின்மீது வரி விதித்தனர். இது விஷயமாய் லார்ட் சபையில் வந்த ஒரு கேள்விக்கு லார்ட் ஹெயில் ஷாம் என்பவர் அரசாங்கத்தின் சார்பாகக் கூறியதாவது:—ருஷிய சாமான்களின்மீது இப்பொழுது இறக்குமதி வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய வரி வியாபார வளர்ச்சியைப் பாதிக்கும் என்பது உண்மையே. ருஷியாவிலுள்ள சில ஆங்கிலேயர் அவ்வரசாங்கத்தால் கொடுமையாக நடத்தப்பெற்றிருக்கின்றனர். இப்பொழுது ருஷியாவில் காவல் தண்டனை அனுபவித்துவரும் தாரண்டன் என்பவரும், மாக்டொனல்டு என்பவரும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டால் இவ்வரி அகலும். அதுவரை அவ்வரி இருக்கவே இருக்கும்.

***

**விதேச ஜவுளி வியாபாரிகள்:**-ஆமதாபாத்திலுள்ள நடியாடி என்னுமிடத்திலுள்ள விதேச ஜவுளி வியாபாரம் செய்பவர்களுக்குக் கையெழுத்தில்லாமலும் தபால்முத்திரை யில்லாமலும் கடிதங்கள் சில வந்தனவாம். அவைகளில், இன்னும் விதேச ஜவுளி வியாபாரம் செய்பவர்கள் மே மாதம் முதல் தேதிக்குள் விதேசி வியாபாரத்தை விடவில்லையாயின், கடைகளுக்குத் தீ வைக்கப்படும் என்றும் கடை முதலாளிகள் கொல்லப்படுவார்கள் என்றும்வரையப்பட்டிருந்ததாம். சமீபத்தில் ஒரு ஜவுளிக்கடையில் தீவைத்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட நால்வரில் மூவர் சத்யாக்கிரஹிகள்—என்று ஆமதாபாத்செய்தி ஒன்று கூறுகின்றது.

***

**ஜால வித்தையால் வந்த கேடு:**—இரங்கோனுக்கு அருகிலுள்ள ஒரு ஊரில் ஒரு நாடகக் கொட்டகையில் ஜால வேடிக்கை நடந்ததாம். அப்பொழுது வித்தை காட்டுபவன் தனது மனைவியை ஹிப்னடிஸத்தால் தூங்கவைத்து அவளைச் சுடுமாறு கூற ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் தமது துப்பாக்கியால் சுடவும் கொட்டகைக்கு அருகில் 1[illegible]5 அடி தூரத்தில் இருந்த ஒரு குழந்தையின்மீது குண்டு பட்டதாம். குழந்தை உடனே வயித்தியசாலைக்கு எடுத்துச் சொல்லப்பட்டதாம்.

***

**பக்தி முறை:**—நாவலொன்றில், ஒரு புலவர் தாம் இயற்றியகாக்கைப் புராணத்தைச் சனங்கள் கேட்குமாறுசெய்ய, சுண்டல் வடை முதலியபதார்த்தங்களுக்குத் தாம் சம்பாதித்த பொருளைச் செலவிட்டுப் புராணத்தை முடித்தார் என்று கூறப்பட்டிருந்தது. இப்பொழுது அத்தகைய செய்தி அமெரிக்காவில் உண்மையில் நடப்பதை அறிய எவரும் வியப்பர். அமெரிக்காவில் இருப்பவர் ஞாயிற்றுக்கிழமைகளில் கோயிலுக்குப் போவதை நிறுத்தி வருகின்றனராம். எனவே ஞாயிற்றுக்கிழமைகளில் கோயில்கள் எல்லாம், காலியாக விருக்குமாம். சில கோயில் அதிகாரிகள் இந்நிலை கண்டு தாளாமல் கோயிலுக்கு வருபவர்களுக்கு வந்து போவதால் ஏற்படும் பெட்ரோல்செலவை ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருக்கின்றனராம். இப்பெட்ரோல் வரும்படியை உத்தேசித்து அக்கோயில்களுக்குச் சிலர் போய்வருகின்றனராம்.

***

**திருவாங்கூர் அரசாங்க ஏற்பாடு:**—இப்பொழுது வருடாவருடம் அதிகமானவர்கள் சட்டக் கல்லூரியில் படித்து இறுதியில் கஷ்டப்பட நேர்கின்றபடியினால் வக்கீல்களின் தொகை குறையவும், இதனால் இப்பொழுது வக்கீல் தொழில் நடத்துபவர்களின் நலத்தையும் உத்தேசித்துத் திருவாங்கூர் அரசாங்கத்தார் 5-வருடங்கள் வரை சட்டக்கல்லூரியை மூடிவிடுவதெனத் தீர்மானம் செய்துள்ளார் என்று திருவாங்கூர்ச் செய்தி கூறுகின்றது.

***

**ஆலங்கட்டி மழையினால் உயிர்ச்சேதம்:**—ஐக்கிய மாகாணத்தில் சில விடங்களில் ஆலங்கட்டி 10 நிமிஷம் வரை பெய்ததால் அக்கட்டி தலையில் விழுந்ததனால் 100 பேர் வரை இறந்தனர் என்றும் பலர் காயமடைந்தனர் என்றும், கால் நடைகள் அதிகம் சேதமாயின என்றும் பயிர்கள் வீணாயின என்றும் லக்னௌ செய்தி கூறுகின்றது.

***

**ஷேக்ஸ்பியர் திருநாள்:**—சென்றவாரம் இங்கிலாந்தில் அவர் பிறந்த ஊரில் ஷேக்ஸ்பியரின் 369-வது பிறந்த நாள் கொண்டாடப்பெற்றதென்றும், 30 தேசங்களிலிருந்து பிரதிநிதிகள் இவ்விழாவிற்கென வந்திருந்தனர் என்றும் பிரிட்டிஷ் செய்தி கூறுகின்றது.

***

**வட்ட மேஜை செலக்ட் கமிட்டி:**—வட்ட மேஜை முடிவின்படி சீர்திருத்த விதிகளைத் தீர்மானம்செய்வதற்காக அமைக்கப்பெற்றிருக்கின்ற வட்டமேஜை செலக்ட் கமிட்டிக்குச் சென்னையிலிருந்து ஸ்ரீமான் A. அரங்கஸாமி ஐயங்கார் அழைக்கப்பட அவரும் 26-ந் தேதியன்று பிரயாணமானர் என்று தெரிகின்றது. காங்கிரஸ்காரர் வட்டமேஜை முடிவை ஏற்காதபடியினால், இச்செலக்டு கமிட்டிக்குக் காங்கிரஸ்காரர்கள் எவரும் போதல் கூடாதென்று தீர்மானம் செய்திருந்தனர் என்றும் அரங்கஸாமி ஐயங்கார் காங்கிரஸ் காரராயிருந்தும், அக்கமிட்டியில் கலந்துகொள்ளச் சென்றதால் அவர் செயல் கண்டிக்கப்படுகின்றதென்றும் தெரிகின்றது.

***

**இங்கிலாந்திற்கு மாம்பழ ஏற்றுமதி:**—சென்றவாரப் பம்பாயிலிருந்து ஒரு கப்பலில் 60 ஆயிரம் மாம்ப[illegible]ங்கள் கெடாமல் பக்குவம் செய்யப் பெற்று இங்கிலாந்திற்கு அனுப்பப்பெற்றனவாம். லண்டனில் இ[illegible] மாம்பழம் ஒன்று 6 ஷில்லிங் முதல் 25 ஷில்லி[illegible] வரையில் விற்கப்படுகின்றதாம். சில ரசாயன ஆராய்[illegible]சிகாரர் மாம்பழத்தில் உணவு சத்து எவ்வள[illegible] இருக்கின்றது என்பதைத் தெளிய ஆய்ந்துவருகி[illegible]றனர். ஆராய்ச்சியின் முடிவில் மாம்பழம் உணவு[illegible] சத்துள்ளவை என்று ஏற்படுமாயின் மாம்பழ விய[illegible]பரம் செய்யப் பெரிய கம்பனி யொன்று இங்கிலா[illegible]தில் ஏற்படலாமாம்.

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. [illegible] கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே பு[illegible] [illegible]ணங்களையுங் குற்றங்க[illegible]யும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் பு[illegible]தின் வரவு[illegible]ரம் குறிக்கப்படு[illegible]

KALANILAYAM
Reg. No. M. 2324.


# — கம்ப ராமாயணம் —

## பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம், சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில் எங்கள் பிரசித்திபெற்ற

### ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆறெழுத்தந்தாதி:—அகத்திய முனிவர் அருளிச் செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்தற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள் களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணசலம் பிள்ளை யவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணு 12. தபால் செலவு வேறு.

பெருமாள் திருமொழி:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்புவோர்க்கு இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-4-0, சாதா 1-0-0. தபால் செலவு வேறு.

கலாநிலயம்
வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

### NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
**Head Office:**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000.

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

### FIRE & ACCIDENT RISKS
**covered by**
**NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the R. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)